RAMRAJ
காட்டன்
இந்தியாவின் கலாச்சாரம்

மலர் 11 • இதழ் 1 • ஜூலை 2026 • விலை ரூ.18/-

# வெண்மை

தமிழ் மாத இதழ்
VENMAI

எண்ணங்கள்

## திறன்
சிறப்பிதழ்




RAMRAJ
lagnaa®
PURE SILK DHOTIS • SHIRTS
நினைவில் நிற்கும் திருமணம்
நிறைவாய் தொடரும் லக்னாவுடன்...

RAMRAJ
காட்டன்
இந்தியாவின் கலாச்சாரம்

**தனக்குள் இருக்கும் தனித்திறனை அடையாளம் கண்டு தினம் தினம் பயிற்சி செய்து அதை வளர்த்துக்கொண்டு மனம் போல உயர்வு பெற்று வளமாக வாழ வழிகாட்டும்**

# திறன்
## சிறப்பிதழ்

**என்ற இந்தப் பயனுள்ள நூலை வழங்குவதில் பெருமிதம் கொள்கிறோம்.**



# மதிப்பிற்குரியவர்களுக்கு...



திறமையே வாய்ப்புகளின் திறவுகோல். எத்தகைய இருள் சூழ்ந்த நிலையில் இருந்தாலும், திறமை இருந்தால் வெளிச்சம் நிச்சயம் நம் மீது விழும். உலகின் பல சாதனையாளர்களின் வாழ்க்கையைப் படித்தால், திறமையை வளர்த்துக்கொண்டு அவர்கள் எப்படி முன்னேறினார்கள் என்பது நம்மை ஊக்கப்படுத்தும். சமீபத்திய உதாரணம், தற்போது நடந்துவரும் உலகக் கோப்பை கால்பந்து போட்டியில் முதன்முதலாகக் கலந்துகொண்ட கேப் வெர்டே (Cape Verde) என்கிற மிகச்சிறிய நாடு. உலகக் கால்பந்துத் தரத்தில் முதன்மையான இடத்தில் இருக்கும் வலிமையான ஸ்பெயின் அணியைத் திணறடித்துக் கவனத்தை ஈர்த்திருக்கிறது.

நம் சென்னை மாநகரின் மக்கள்தொகை ஒரு கோடியே 33 லட்சம். ஆப்பிரிக்கக் கண்டத்தில் அட்லாண்டிக் பெருங்கடலில் அமைந்துள்ள தீவு நாடான கேப் வெர்டே மக்கள்தொகை, வெறும் ஐந்து லட்சம். ஐரோப்பிய நாடுகளுக்குப் புலம்பெயர்ந்து அடிமட்ட வேலைகளைச் செய்வதே அந்நாட்டு மக்களில் பலரின் கனவு. எந்தத் தனித்த அடையாளமும் இல்லாத நாட்டிற்குக் கால்பந்து இப்போது தனித்த அடையாளத்தைத் தந்திருக்கிறது. 1982–ம் ஆண்டில்தான் முறையாக, கால்பந்து சங்கம் உருவாக்கி, உலகக் கோப்பைப் போட்டிகளில் விளையாடுவதற்குத் தகுதிபெறும் முயற்சியில் ஈடுபட்டனர். 2026–ல் அந்தக் கனவு நிறைவேறியது.


முதன்முதலாக உலகக் கோப்பையில் பங்கேற்கும் சிறிய அணியின் முதல் போட்டியே உலகத் தரவரிசையில் முதன்மையாக இருக்கும் ஸ்பெயின் அணியுடன் நடைபெற்றது. உலகின் வலிமை மிக்க அணியிடம் மிக மோசமாகத் தோற்பார்கள் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில், திறமையான ஆட்டத்தின் மூலம் உலக நாடுகளைத் திரும்பிப் பார்க்க வைத்திருக்கிறது அந்தக் குட்டி நாடு. குறிப்பாக கேப் வெர்டே அணியின் கோல்கீப்பர் வோசினியா இந்தப் போட்டியில் ஸ்பெயின் வீரர்கள் துல்லியமாக அடித்த ஏழு கோல்களை மிகத்திறமையாகத் தடுத்து அனைவரையும் ஆச்சர்யப்படுத்தினார். இதனால் ஸ்பெயின் அணி கோல் போடமுடியாமல் ஆட்டம் சமநிலையை அடைந்தது. இந்தச் சமநிலை என்பதே வெற்றியைவிட மிகப்பெரிய சாதனையாகக் கொண்டாடப்படுகிறது. மைதானம் முழுவதும் நிரம்பி வழிந்த ஸ்பெயின் அணி ரசிகர்களும், சிறிய நாட்டின் ஆட்டத்திறனை வியந்து பாராட்டினர்.

இத்தனைக்கும் கோல்கீப்பர் வோசினியாவின் வயது 40. பொதுவாக விளையாட்டில் இருந்து ஓய்வு பெறும் வயதில், அவருக்கு உலகக் கோப்பையில் விளையாடும் முதல் வாய்ப்பு சாத்தியமாகி இருக்கிறது. ஒரே இரவில் உலகக் கால்பந்தாட்ட ரசிகர்களின் கவனத்தை ஈர்த்து, தன் தேசத்து மக்களிடம் ஹீரோவாக உயர்ந்திருக்கிறார் வோசினியா. போட்டி தொடங்குவதற்கு முன்பு அவருடைய இன்ஸ்டாகிராம் பக்கத்தைப் பின்தொடர்பவர்கள் எண்ணிக்கை ஐம்பதாயிரம் கூட இல்லை. போட்டி முடிந்த 12 மணி நேரத்தில் 50 லட்சம் பேர் அவரைப் பின்தொடர்கிறார்கள். இந்தப் போட்டி தொடங்கும் முன்பு ஸ்பெயின் நாட்டுடன் ஏதோ ஒரு ஆப்பிரிக்க நாடு விளையாடுகிறது என்பதைத் தவிர வேறெதுவும் தெரியாது. போட்டி முடிவடைந்த அடுத்த நொடியிலிருந்து, உலக வரைபடத்தில் சில புள்ளிகளாக இருக்கும் கேப் வெர்டே தீவைப் பற்றி அறிந்துகொள்ள லட்சக்கணக்கானவர்கள் ஆர்வமாகத் தேடி இருக்கிறார்கள். திறமையாளர்களை உலகம் எப்படிக் கொண்டாடும் என்பதற்கு இது சிறந்த நிகழ்கால உதாரணம்.

கல்வி என்பது ஒரு மனிதரின் அறிவையும் திறமையையும் வளர்ப்பதற்குதான் என்று இருந்தபோது, அந்தக் கல்வி ஒருவரின் வாழ்க்கையை மாற்றும் என்று நம்பினோம். இன்று மதிப்பெண்கள் மட்டுமே அளவுகோலாக மாறிய நிலையில், திறமை பின்னுக்குத் தள்ளப்பட்டு இந்தியா போன்ற வளரும் நாடுகள் தடுமாறுகின்றன. எல்.கே.ஜி தொடங்கிப் பொறியியல் பட்டம் பெறுவது வரை லட்சக்கணக்கில் செலவு செய்து படித்தவர்கள், வேலைவாய்ப்புகள் பெறுவதில் பெரும் சிக்கலைச் சந்திக்கிறார்கள். தொழில் நிறுவனங்களுக்குப் பட்டதாரிகள் கிடைக்கிறார்களே தவிர, அந்தப் பட்டத்திற்கான திறன் பெற்றவர்கள் கிடைப்பதில்லை. உள்ளூர் நிறுவனங்கள் முதல் பன்னாட்டு நிறுவனங்கள் வரை திறன் மிகுந்தவர்கள் வேலைக்குக் கிடைப்பதில்லை என்பதை வலியுறுத்தி வருகின்றன.

'ஸோகோ' (Zoho) போன்ற நிறுவனங்கள், 'எங்களுக்குப் பட்டதாரிகள் வேண்டாம். பள்ளிப்படிப்பு முடித்தவர்களுக்கு, எங்களுக்குத் தேவையான திறனைப் பயிற்சியாக அளித்து வேலைக்கு எடுத்துக் கொள்கிறோம்' என்று புதிய முயற்சிகளை மேற்கொள்கின்றன. மேலும் பல பன்னாட்டு நிறுவனங்கள், வேலைக்கு ஆட்களை எடுத்த பிறகு, தனியாகத் திறன் வளர்க்கும் பயிற்சிகளை அளிக்கின்றன.

தனிமனிதர்களோ, நிறுவனமோ வெற்றி பெறுவதற்குத் திறமையே மூலதனம். படித்துவிட்டு வேலை தேடுபவர்கள் கோடிக்கணக்கில் இருக்கிறார்கள். திறன் உள்ளவர்களின் பற்றாக்குறையால் தொழில்துறை தடுமாறுகிறது.



The Culturepreneur

'கல்வி என்பது அறிவையும் திறமையையும் ஒருங்கிணைத்து வளர்க்க வேண்டியது' என்பதை நாம் உணர வேண்டும். மதிப்பெண்கள் கல்லூரிகளில் இடம் கிடைக்க உதவலாம். வேலைவாய்ப்பைப் பெறவும், கிடைத்த வேலையில் வளர்ச்சியை நோக்கிப் பயணிக்கவும் திறமையே மூலதனம். ஒருவர் நீச்சல் அடிப்பது எப்படி என்கிற புத்தகத்தைத் தலைகீழாக மனப்பாடம் செய்யலாம். புத்தகத்திலிருந்து எந்தக் கேள்வி கேட்டாலும் நொடியில் பதில் சொல்லலாம். அதை நம்பி ஆற்றில் குதிக்க முடியாது. அதற்கு நீச்சல் பயிற்சியைப் பெற்று, தண்ணீரில் நீந்தப் பழகவேண்டும். ஆற்றின் நீரோட்டத்திற்கு ஏற்ப லாவகமாக நீந்தும் திறமை வேண்டும்.

அம்பானி தொழில் நிறுவனங்களை உருவாக்கிய திருபாய் அம்பானி, கல்லூரியில் பட்டம் பெற்றவர் இல்லை. வளைகுடா நாடு ஒன்றில் பெட்ரோல் நிலையத்தில் பணியாற்றியவர். அவருக்குக் கணிதமோ, அறிவியலோ அவ்வளவாகத் தெரியாது. ஆனால், மனிதர்களின் தேவையைப் புரிந்துகொள்ளும் திறன் இருந்தது. கிடைக்கிற வாய்ப்பைச் சரியாகப் பயன்படுத்தவும், இல்லாத வாய்ப்பை உருவாக்கவும் தெரிந்திருந்தது. இரவு பகலாக உழைக்கவும் தயாராக இருந்தார். தொழில்துறைக்கே உரிய ரிஸ்க் எடுக்கும் துணிவும் இருந்தது. இவை எல்லாம் அவரை வெற்றிகரமான தொழிலதிபராக மாற்றின. தனிமனிதர்களின் வளர்ச்சிக்கு மட்டுமின்றி நாட்டின் வளர்ச்சிக்கும் திறன் மிகுந்த மனிதவளம் அவசியம்.

ஐ.நா. சபை ஒவ்வொரு ஆண்டும் ஜூலை 15 அன்று, 'உலக இளையோர் திறன் தினம்' (World Youth Skills Day) கொண்டாடுகிறது. திறமை மிகுந்த இளைய சமூகமே உலக நாடுகளின் வளர்ச்சியை உயர்த்தும் என்பதை வலியுறுத்தி, ஒவ்வோர் ஆண்டும் இலக்குகளைத் தீர்மானித்து அறிவுறுத்துகிறது. ஏ.ஐ தொழில்நுட்பம் அன்றாட வாழ்வின் அங்கமாக மாறிவரும் சூழலில், வேலைவாய்ப்புகளில் தலைகீழான மாற்றங்கள் நிகழப்போகின்றன. ஒரு மனிதர் இன்னொரு மனிதரின் திறமையோடு போட்டியிட்ட சூழல் மாறி, தொழில்நுட்பத்துடன் போட்டியிட வேண்டும்.


திறன் என்பது மாணவர் எனில், பயிற்சியே சிறந்த ஆசிரியர். ஒவ்வொரு மனிதருக்கும் ஒரு தனித்திறமை நிச்சயம் உண்டு. நாம் செய்ய வேண்டியது நமது திறமையை அடையாளம் காண்பதும், அது தேய்ந்துவிடாமல் தேங்கிவிடாமல், கடுமையான பயிற்சிகள் மூலம் வளர்த்தெடுப்பதும்தான். திறனை வளர்த்து வாழ்வில் உயரங்களைத் தொடுவோம்.

குரு அருள்

வாழ்க வையகம்... வாழ்க வளமுடன்!

**கே.ஆர்.நாகராஜன்**

நிறுவனர் – ராம்ராஜ் காட்டன்



# திறன்களை வளர்த்துக்கொள்ள வழிதேடுங்கள்!

தருண் கம்ப்யூட்டரில் பிசியாக இருக்க, காலிங் பெல் அடித்தது. கதவைத் திறந்தார் அம்மா. பக்கத்து வீட்டுப் பெண்மணி கையில் இனிப்புகளுடன் நின்றிருந்தார். “காலேஜ் முடிச்ச என் பையனுக்கு வேலை கிடைச்சிருக்கு” என்றவர், ஒரு பெரிய சர்வதேச நிறுவனத்தின் பெயரைச் சொன்னார். ‘‘வருஷம் 12 லட்ச ரூபாய் சம்பளம்’’ என்றார் பெருமையாக! அம்மா வாழ்த்துச் சொன்னதும், “அது சரி, உங்க பையன் ஏதாவது இன்டர்வியூவுக்கு ரெடியாகறானா?” என்று கேட்டார். “இல்ல, அவன் ஒரு புது புரோக்ராமிங் பண்ணிக்கிட்டு இருக்கான்’’ என அம்மா சொல்ல, “ஆமாம், எந்த நேரமும் கம்ப்யூட்டர்ல விளையாடிக்கிட்டே இருந்தா எப்படி வேலை கிடைக்கும்? என் பையனைப் பார்த்துக் கத்துக்கச் சொல்லுங்க” என்று தருணை அவர் கிண்டல் செய்துவிட்டுப் போனார். அவர் வந்ததே அதற்குத்தான் என்பது தருணின் அம்மாவுக்குப் புரிந்தது.

ஒரு வருடம் கழித்து அதே பக்கத்து வீட்டுப் பெண்மணி சோகமாக வந்தார். “என் பையனுக்கு வேலை போயிடுச்சு” என்றார். “அவனுக்கு புரோக்ராமிங்ல அடிப்படையா என்ன தெரியும்னு என்கிட்ட வந்து பேசச் சொல்லுங்க, என் கம்பெனியில வேலைக்கு எடுத்துக்கறேன்” என்றான் தருண். அந்தப் பெண்மணி புரியாமல் விழிக்க, “நான் சின்னதா ஒரு கம்ப்யூட்டர் கம்பெனி வச்சிருக்கேன். நிறைய புராஜெக்ட்ஸ் எடுத்துச் செய்யறேன். என்கிட்ட 20 பேர் வேலை பார்க்கிறாங்க” எனத் தருண் சொன்னான். அவன் இத்தனைக் காலம் கம்ப்யூட்டரில் என்ன செய்துகொண்டிருந்தான் என்பது இப்போதுதான் அவருக்குப் புரிந்தது.

மற்றவர்களைவிட ஏதோ ஒரு திறனில் மேன்மையாக இருப்பவருக்கு இந்த உலகில் எல்லாக் கதவுகளும் எளிதில் திறக்கின்றன. அந்தத் திறன் என்பது என்ன? அதை எப்படி வளர்த்துக்கொள்வது?

ஒருவர் தன் வாழ்க்கை முழுக்க ஒரு விஷயத்தில் செய்யும் கற்றல், அதில் அவருக்குக் கிடைக்கும் அனுபவங்கள், அதை அவர் செய்யும் நேர்த்தி இந்த எல்லாம் சேர்ந்து அவருக்கு ஒரு திறனைத் தருகின்றன. அதை அவர் எப்படி வளர்த்துக்கொள்கிறார் என்பதுதான் அவரை மற்றவர்களிடமிருந்து வேறுபடுத்திக் காட்டுகிறது. இதைச் சரியாகப் புரிந்துகொண்டு ஒரு குறிப்பிட்ட துறையில் நிபுணராக மாறும் ஒருவருக்கு எல்லா வாய்ப்புகளும் கிடைக்கும்.

ஒருவர் தன் தனிப்பட்ட வாழ்விலும், தொழில் வாழ்க்கையிலும் பல்வேறு திறன்களை வெளிப்படுத்த

வேண்டியுள்ளது. இந்த இரண்டும் கலக்கும்போதே அவருக்கு நற்பெயரும் உயர்வும் கிடைக்கும். எவ்வளவு பெரிய திறமைசாலியாக இருந்தாலும், தனிப்பட்ட வாழ்வில் ஒழுக்கம் இல்லாத ஒருவரை யாரும் விரும்ப மாட்டார்கள். தனிப்பட்ட வாழ்வில் ஒழுக்கமாக இருக்கும் ஒருவருக்குச் சராசரித் திறமைகள் மட்டுமே இருந்தால், ‘அவர் நல்லவர்தான். ஆனால் வல்லவர் இல்லை’ என்று ஒதுக்கிவிடுவார்கள்.

பல்வேறு திறன்களும் ஒன்றாகப் பெற்ற ஒருவரையே எல்லா நிறுவனங்களும் விரும்பும். அதனால்தான் ஒருவர் தனது தனிப்பட்ட திறன்கள் மற்றும் துறை சார்ந்த திறன்கள் என்று இரண்டையுமே குறிப்பிடுவது அவசியம். வேலை தேடும் ஒருவரிடம் இந்த இரண்டும் இருக்கின்றனவா என்று நிறுவனங்களும் தேடுகின்றன. சரியான திறமைக் கலவையுடன் இருப்பவருக்கு உடனே வேலை கிடைக்கும், அவர் திறமையை வெளிப்படுத்தும்போது அங்கு விரைவில் உயர்வும் கிடைக்கும். அவரது திறமை அந்த நிறுவனத்துக்கும் பயன் தரும். புதுப்புது வழிமுறைகள், நவீன




தொழில்நுட்பங்கள், புதிய உத்திகள் என்று பயன்படுத்தி நிறுவனத்துக்கு அவர் மதிப்பையும் தருவார், வளர்ச்சியையும் கொடுப்பார். திறன்கள் நிறைந்த ஒருவர், சக ஊழியர்களை விட உயர்வாக மதிக்கப்படுவார். அப்படிப்பட்டவர்களைப் பணியில் வைத்திருக்கும் நிறுவனங்கள், தங்கள் போட்டி நிறுவனங்களைவிட வேகமாக வளரும்.

ஒருவரின் தனிப்பட்ட திறன்கள் என்பவை, அவர் எப்படிப்பட்ட வேலையில் இருந்தாலும், என்ன தொழில் செய்தாலும் முக்கியமானவை. அந்தத் திறன்களே அவரது கேரக்டரை செதுக்கும். அவர் எப்படி இயங்குகிறார், மற்றவர்களுடன் எப்படிப் பழகுகிறார், தன் உணர்வுகளை எப்படி வெளிப்படுத்துகிறார் என்பது போன்ற பல விஷயங்களை முடிவு செய்யும். அப்படி ஒருவருக்கு அடிப்படையாகச் சில திறன்கள் அவசியம்.

அடிப்படையான ஒரு திறன், நாணயம். சொல்லும் செயலுக்கும் வித்தியாசம் இல்லாமல் நடந்துகொள்ள வேண்டும். அப்போதுதான் ஒருவர் பேசும் வார்த்தைகளுக்கு மதிப்புக் கிடைக்கும். மற்றவர்களுடன் எப்படிப் பேசுகிறோம் என்பதும் முக்கியம். கண்ணியமான வார்த்தைகளில் தெளிவாக எதையும் பேசும் ஒருவரை எல்லோருமே விரும்புவார்கள். எல்லோரிடமும் கனிவாக நடந்துகொள்வது, மற்றவர்களை ஊக்கப்படுத்துவது, குழுவாக இணைந்து தயக்கமின்றிப் பணிபுரிவது, எந்தச் சூழலுக்கும் பொருந்திப் போவது ஆகியவையும் அடிப்படைக் குணங்கள்.

நேர நிர்வாகத்தில் கச்சிதமாக இருப்பது, தள்ளிப் போடாமல் செயல்களைச் செய்துமுடிப்பது, எப்படிப்பட்ட பிரச்னைகளையும் முரண்பாடுகளையும் பேசித் தீர்ப்பது, மற்றவர்களைப் போலச் சிந்திக்காமல் வித்தியாசமாக யோசித்து முடிவுகள் எடுப்பது, தவறுகளில் நொறுங்கிப் போகாமல் கற்றுக்கொள்ளத் தயாராக இருப்பது, தலைமைப் பண்புடன் நடந்துகொள்வது ஆகியவையும் அடிப்படைத் திறன்கள்.

வேலை அல்லது தொழில்ரீதியாக ஒவ்வொருவருக்கும் வெவ்வேறு திறன்கள் தேவைப்படும். அவரவர் இருக்கும் துறைக்கு ஏற்றபடி அவை வேறுபடும். நிறுவனத்தின் வரவு செலவுக் கணக்குகளைப் பராமரிக்கும் ஒருவருக்கு அக்கவுன்டிங் தொடர்பான அடிப்படைகள், எக்ஸெல் போன்ற சாஃப்ட்வேர்ட்கள், கணக்குகள் குறித்த அடிப்படை விஷயங்கள் எல்லாமே தெரிந்திருக்க வேண்டும். அவற்றை அவர் எவ்வளவு ஆழமாகத் தெரிந்து வைத்திருக்கிறார் என்பதைப் பொறுத்து அவரால் வேகமாக வேலை பார்க்க முடியும்.

வெளிநாடு ஒன்றுடன் வர்த்தகம் செய்யும் ஒரு நிறுவனத்தின் பணியாளர், அந்த வெளிநாட்டு மொழியை நன்கு தெரிந்து வைத்திருந்தால், அந்த நிறுவனத்தில் அவருக்கான மதிப்பு மிக அதிகம். அடிப்படையாக ஆங்கிலத்தில் சரளமாகப் பேசுவதுகூட ஒரு முக்கியமான திறமை. வட இந்தியத் தொழிலாளர்கள் பரவலாக இங்கு பணிக்கு வந்துவிட்ட சூழலில், அவர்களுக்குப் புரிகிற மாதிரி இந்தியில் பேசுவதுகூட ஒரு தனித்திறன்தான்! விற்பனைத் துறையில் பணிபுரியும் ஒருவருக்கு, தங்கள் நிறுவனத்தின் தயாரிப்புகளை மதிப்புடன் விவரித்து வியாபாரம் செய்யும் திறன் வேண்டும்.

போட்டிகள் நிறைந்ததாக உலகம் மாறிக் கொண்டிருக்கிறது. மனிதர்கள் ஒரு நாள் முழுக்கச் செய்கிற வேலையைச் சில நிமிடங்களில் செய்துவிடும் தொழில்நுட்பம் வந்துவிட்டது. இந்நிலையில் தனித்திறனே ஒருவரைச் சக மனிதர்களிடம் இருந்தும், தொழில்நுட்பங்களிடம் இருந்தும் வேறுபடுத்திக் காட்டும். சரியான திறன்களைத் தேடி அடையுங்கள். ●



## நேரத்தை வீணடிக்கவில்லை!

ஒரு கிராமத்தில் மிகச்சிறந்த வாள்களைச் செய்யும் இளைஞன் ஒருவன் இருந்தான். அவன் உருவாக்கித் தரும் வாள்கள், எத்தனை ஆண்டுகள் ஆனாலும், எத்தனைப் போர்க்களங்களைச் சந்தித்தாலும் கூர்மையை இழந்ததில்லை. அழகும் நேர்த்தியும் கொண்ட அந்த வாள்களைக் கையில் ஏந்தினாலே, எந்த வீரனுக்கும் தன்னம்பிக்கை வந்துவிடும். அதனால் நாட்டின் படைவீரர்கள் அனைவரும் அவன் உருவாக்கும் வாள்களை விரும்பி வாங்கினார்கள். வேகமாகவே அவன் புகழ் நாடு முழுக்கப் பரவி, நாட்டின் தளபதி வரை எல்லோருமே அவனிடம் வாள்களைக் கேட்டு வாங்கினார்கள்.

எங்கோ தொலைதூரக் கிராமத்தில் இருந்துகொண்டு நாட்டிலேயே மிகச்சிறந்த வாள்களை உருவாக்கும் திறன் படைத்த அவனை ஒருமுறை மன்னர் தன் அரண்மனைக்கு அழைத்தார். "எப்படி இந்தத் திறமையை வளர்த்துக்கொண்டாய்?" என்று கேட்டார்.

"அது மிக எளிமையானது மகாராஜா. என் சிறுவயது முதலே அப்பாவின் பட்டறையைப் பார்த்து வளர்ந்தேன். இயல்பாகவே இந்தத் தொழிலை நேசிக்க ஆரம்பித்தேன். ஒவ்வொரு வாளையும் மனப்பூர்வமாகச் செய்தேன். இந்தத் தொழிலில் நாட்டிலேயே மிகச் சிறந்தவனாக மாற வேண்டும் என்று தீர்மானித்தேன். இது தொடர்பான எல்லா நுணுக்கங்களையும் கற்றுக்கொண்டேன். இதைத் தவிர வேறு எதிலும் என் கவனம் போகவில்லை. வாள் கலைக்குத் தொடர்பில்லாத வேறு எந்த விஷயத்திலும் என் நேரத்தை ஒரு நிமிடம்கூட வீணடிக்கவில்லை. அதுதான் என் வெற்றியின் ரகசியம்" என்றான் இளைஞன்.

## 10 ஆண்டு உழைப்பு!

இப்போது 20 அல்லது 30 வயதில் இருக்கும் ஓர் இளைஞர், அடுத்த 10 ஆண்டுகளுக்குக் கடுமையாக உழைத்துத் தன் திறன்களை வளர்த்துக்கொண்டு வாழ்வில் உயர்வதற்கு என்ன செய்ய வேண்டும்?

- அதிகாலையில் விழித்து எழுங்கள். மற்றவர்களைவிட உங்களுக்குக் கூடுதல் நேரம் கிடைக்கும். உடல்நலனுக்காக உடற்பயிற்சிகள் செய்யவும், மனதை வளமாக்கும் யோகா போன்றவற்றைச் செய்யவும் அதிகாலையைப் பயன்படுத்தலாம். இது தினசரிப் பழக்கமாக மாறினால், உங்கள் வாழ்வு நேர்த்தியாகும்.
- ஒரு திறன் என்பது உங்களுக்குப் புகழையோ, பணத்தையோ, பெரிய மனிதர்களின் நட்பையோ பெற்றுத் தர வேண்டும். உங்களை மற்றவர்களிடமிருந்து வேறுபடுத்திக் காட்டுவது இந்த விஷயங்கள்தான். அப்படியான தனித்திறன்களை வளர்த்துக்கொள்ளுங்கள்.
- நீங்கள் எந்தத் துறையில் இருந்தாலும், அந்தத் துறை பற்றிய விஷயங்களைத் தேடி அறிந்துகொள்ளுங்கள். புத்தகங்கள் படிப்பது, இணையதளங்களிலும் செய்திகளிலும் படிப்பது, அனுபவசாலிகளுடன் பேசுவது என்று தேடலில் ஈடுபடுங்கள். அதன்பின் சராசரியான ஒருவராக இருக்கமாட்டீர்கள்.
- நீங்கள் கற்றுக்கொண்ட விஷயங்களைச் சும்மா வைத்திருப்பதில் அர்த்தமில்லை. அவற்றைப் பயன்படுத்தி உங்கள் துறையில் முன்னேறப் பாருங்கள். தெளிவான மனதுடன் உறுதியாகச் செயல்படும் ஒருவர், மற்றவர்களைவிட எளிதாக முன்னேறுவார்.
- எட்டு மணி நேரம் வேலை பார்த்து வரும் வருமானத்தில் வாழ்க்கை நடத்தினால், அது சராசரி வாழ்வாகவே இருக்கும். உங்களுக்குத் தெரிந்த ஒரு திறனை வைத்து கூடுதலாகச் சம்பாதிக்கப் பாருங்கள். அல்லது உங்கள் பணத்தை நன்கு முதலீடு செய்து பெருக்குங்கள்.



## “மற்றவர்கள் முடிவு செய்யக்கூடாது!”



புனிதா இருக்கும் இடம் அவ்வளவு கலகலப்பாக இருக்கும். பள்ளியில் பிளஸ் ஒன் வகுப்புப் படிக்கும் மாணவி என்றாலும், எல்லா விஷயங்களையும் பற்றி நகைச்சுவையாகப் பேசுவாள். அப்படிப்பட்ட புனிதா, இப்போது சோகமாகக் காட்சி தந்தாள். அம்மா கவலைப்பட்டு அவளை விசாரித்தார். “நான் குரோஷா வயர்களை வைத்து விதவிதமா பொருட்கள் செய்வேன்னு உனக்குத் தெரியுமே அம்மா. அப்படி அழகா ஒரு வளையல் செய்து மாட்டிக்கிட்டு போனேன். ஒரு பொண்ணு அதைப் பிடுங்கி, ‘இது கேவலமா இருக்கு’ன்னு நசுக்கிப் போட்டுட்டா” என்று சொல்லி அழுதாள் புனிதா. “உனக்கு அந்த வளையல் எப்படி இருந்தது?” என்று கேட்டார் அம்மா. “ரொம்ப அழகா இருந்துச்சு?” என்றாள் புனிதா. “அதை மட்டும் நம்பு! நீ செய்கிற விஷயங்கள் நல்லா இல்லை என்று மற்றவர்கள் முடிவு செய்யக்கூடாது” என்று உறுதியாகச் சொன்னார் அம்மா.

அதன்பின் புனிதா குரோஷா வயர்களை வைத்து ஏராளமான அழகுப் பொருட்களை உருவாக்கினாள். தனியாக ஒரு இன்ஸ்டாகிராம் பக்கத்தை உருவாக்கி, அவற்றை விற்பனை செய்யத் தொடங்கினாள். பிரபலங்கள் பலரும் அவற்றை விரும்பி வாங்கி அணிந்தனர். படிப்படியாக அழகுசாதனப் பொருட்கள், உடைகள் என்று அவளது திறமை விரிய, பள்ளிப்படிப்பை முடிப்பதற்கு முன்பாகவே அவள் தொழிலதிபர் ஆகியிருந்தாள். காரணம், தன் திறமையை மற்றவர்கள் தீர்மானிக்க அவள் அனுமதிக்கவில்லை.



## திறனை வளர்க்கும் வழிகள்!

- தீர்வு இல்லாத பிரச்னை என்று எதுவுமே இல்லை. இப்போது நீங்கள் சந்திக்கும் நெருக்கடி எதுவாக இருந்தாலும், அதைத் தீர்ப்பதற்கான வழி உங்கள் கண்ணெதிரே இருக்கிறது.
- இன்று உங்களை வாட்டி வதைப்பது எந்தப் பிரச்னையாக இருந்தாலும், தோல்வி அடைந்துவிட்டதாக நினைக்காதீர்கள். எதையும் மாற்றும் திறமையும் நம்பிக்கையும் உங்களிடம் இருக்கிறது.
- உங்களைப் பற்றி நீங்கள் எப்படிக் கற்பனை செய்கிறீர்கள் என்பது உங்கள் மகிழ்ச்சியைப் பாதிக்கும். மதிப்பான மனிதராக உங்களைக் கருதுங்கள். தாழ்வு மனப்பான்மை வேண்டாம், தன்னம்பிக்கையை இழக்க வேண்டாம்.
- மற்றவர்களின் மோசமான விமர்சனங்களை அலட்சியப்படுத்துங்கள். அவை உங்களைத் திருத்திக்கொள்ளச் சொல்லப்படுவதில்லை, உங்களை வீழ்த்துவதற்காக வீசப்படும் வசைகள் அவை.
- உங்களை மகிழ்ச்சியாக வைத்திருக்கும், அக்கறையான ஆலோசனைகள் சொல்லும் நல்ல நண்பர்களை எப்போதும் இழக்காதீர்கள்.
- பணம் மற்றும் பொருட்களை வைத்து உங்களைச் சபலத்துக்கு ஆளாக்கும் சூழல்களை உறுதியாகத் தவிர்த்துவிடுங்கள். உங்களால் அவற்றைச் சம்பாதிக்க முடிகிற நாள் நிச்சயம் வரும்.
- நீங்கள் அடைய நினைப்பது எதுவாக இருந்தாலும், அதற்காக ரிஸ்க் எடுக்கத் தயங்காதீர்கள்.




# நிர்வாகத்தில் திறமை பெற 10 வழிகள்!

ஒரு நிறுவனத்துக்குத் தலைமை தாங்கும் நிர்வாகிக்கு மட்டும்தான் நிர்வாகத்திறன் தேவை என்று நினைக்க வேண்டாம். குடும்பம், வேலை, தொழில், வியாபாரம், கல்வி என்று எந்த இடத்திலும் எல்லோருக்குமே நிர்வாகத்திறன் ஒரு முக்கியமான பண்பாகத் தேவைப்படுகிறது. நேரத்தை நிர்வாகம் செய்யத் தெரியாத மாணவன், நல்ல மதிப்பெண் பெற முடியாது. பணத்தை நிர்வாகம் செய்யத் தெரியாத வியாபாரி, நல்ல லாபம் சம்பாதிக்க முடியாது. இப்படி ஒவ்வொரு இடத்திலும் நல்ல நிர்வாகம் செய்து சிறப்புப் பெற இந்த வழிகள் உதவும்...

- எல்லாவற்றையும் நீங்களே செய்ய வேண்டும் என்று நினைக்காதீர்கள். பொறுப்புகளை எல்லோருக்கும் பகிர்ந்து கொடுங்கள். எந்த இடத்திலும் கூட்டுமுயற்சியே ஜெயிக்கும்.
- வேலை தொடர்பான தெளிவான தகவல்கள், உங்களுடன் இணைந்து வேலை பார்ப்பவர்கள் எல்லோருக்கும் தெரிந்திருக்க வேண்டும். அரைகுறையாக ஒரு விஷயத்தைச் சொல்லிவிட்டு, அவர்கள் முழு ஈடுபாட்டுடன் உழைப்பார்கள் என எதிர்பார்க்காதீர்கள்.
- எந்த யோசனையாக இருந்தாலும், அதைச் செயல்படுத்துவதற்குப் பல்வேறு வழிகளைப் பரிசோதனை செய்து பாருங்கள். அவற்றில் எது சிறந்தது என்று யோசித்து முடிவெடுங்கள்.
- போருக்குச் செல்லும் விமானிகள்கூட, ஏதேனும் விபரீதமாக நடந்துவிட்டால் என்ன செய்வது என்று பாதுகாப்பாக பாராசூட் எடுத்துச் செல்கிறார்கள். தோல்விகள் ஏதேனும் ஏற்பட்டாலும், பெரிய பாதிப்பு இல்லாமல் தவிர்ப்பதற்குத் திட்டம் வைத்திருங்கள்.
- நீங்கள் ஒரு விஷயத்தைத் திட்டமிடுகிறீர்கள். உங்களைவிட அனுபவம் வாய்ந்த ஒரு நண்பர் உதவிக்கு வருகிறார் என்றால், அவரது யோசனைகளையும் கேளுங்கள்.
- அனுபவங்களைவிடச் சிறந்த ஆசான் வேறு யாரும் இருக்க முடியாது. உங்கள் அனுபவங்கள் மூலமாகவும், மற்றவர்களின் அனுபவப் பாடங்களிலிருந்தும் நிறைய கற்றுக்கொள்ளுங்கள்.
- எந்தச் செயலில் இறங்கினாலும், அதை மனப்பூர்வமாகச் செய்யுங்கள். உங்கள் உழைப்பை 100 சதவிகிதம் கொடுங்கள்.
- நிர்வாகம் என்பது தொடர்ச்சியான கற்றல் மூலம் மெருகேற்றப்படும் ஒரு விஷயம். 'எனக்கு எல்லாம் தெரியும்' என்ற நினைப்பை எப்போதும் மனத்தில் வளர்த்துக்கொள்ளாதீர்கள். அப்புறம் கற்றுக்கொள்ளவே முடியாது.
- பழைய வழியிலேயே செல்பவர்களுக்கு ஒரே மாதிரி முடிவுகளே கிடைக்கும். புதுமையாகச் சிந்திக்காமல், புதிய வழிகளை முயற்சி செய்யாமல், வித்தியாசமான விளைவுகள் கிடைக்காது. புதுமைகள் செய்யத் தயாராக இருங்கள்.
- ஆரோக்கியமான பொழுதுபோக்குகள், உடற்பயிற்சிகள், தியானம் போன்ற மனவளப் பயிற்சிகள் அவசியம். மனதை அவை லேசாக்கும். அதன்பின் புத்துணர்வுடன் சிந்தித்துச் சுறுசுறுப்பாக உங்களால் உழைக்க முடியும். ●



# திறமையைச் செயலாக மாற்றுங்கள்!

ஒவ்வொரு காலகட்டத்திலும் நம்மை முன்னேறச் செய்வதற்கான திறமைகளின் பட்டியல் மாறிக்கொண்டே இருக்கிறது. இந்தக் காலத்தில் ஜெயிப்பதற்கு எப்படிப்பட்ட திறன்கள் நமக்குத் தேவை?

- தினம் தினம் எல்லா விஷயங்களும் மாறிக் கொண்டே இருக்கின்றன. நாமே எதிர்பார்க்காத பல முன்னேற்றங்கள் நடக்கின்றன. என்றாலும், நாம் இருக்கும் துறையானது எதிர்காலத்தில் எப்படி மாறும் என்பதைத் துல்லியமாகக் கணிக்கத் தெரிந்திருக்க வேண்டும்.
- எல்லா மாற்றங்களுக்கும் நம்மைத் தயார்படுத்திக்கொள்ளும் அளவுக்குக் கற்றுக்கொண்டே இருக்க வேண்டும். கடினமான எப்படிப்பட்ட சோதனைகளையும் தாங்கி முன்னேறும் வல்லமை பெற்றிருக்க வேண்டும்.
- இந்த உலகில் அதிகம் இலவசமாகக் கிடைப்பவை அறிவுரைகளும் யோசனைகளும்தான்! நாம் விரும்பிக் கேட்பவை தாண்டி, விரும்பாத மனிதர்களும் வந்து யோசனைகளைச் சொல்வார்கள். அவற்றைச் சகிப்புத்தன்மையுடன் காதுகொடுத்துக் கேட்க வேண்டும். வந்து குவியும் யோசனைகளில் நமக்குப் பொருத்தமானது எது என்று தேர்வு செய்யத் தெரிந்திருக்க வேண்டும்.
- யோசனைகள் வெறுமனே யோசனைகளாக இருக்கக்கூடாது. அவை செயலாக மாற வேண்டும். வித்தியாசமான யோசனைகளைத் தயக்கமே இல்லாமல் செயல்படுத்தியதால்தான் ஸ்டீவ் ஜாப்ஸ், பில் கேட்ஸ், மார்க் ஸுக்கர்பெர்க், முகேஷ் அம்பானி போன்றவர்கள் உலகப் பணக்காரர்கள் வரிசையில் உயர்ந்தார்கள். எதையும் செயல்படுத்தத் தெரிந்தவர்களின் கனவுகளுக்கே சிறகுகள் முளைக்கின்றன.
- கருத்து வேறுபாடுகளால் முரண்படும் மனிதர்களைச் சமாதானம் செய்வதும், நம் யோசனைகளுக்கு எதிர்ப்புத் தெரிவிப்பவர்களைச் சம்மதிக்க வைப்பதும் ஒரு கலை. புன்சிரிப்புடன் அதையெல்லாம் செய்யப் பழக வேண்டும்.
- ஒவ்வொரு சூழலிலும் அடுத்தவர்கள் எதையெல்லாம் செய்யக்கூடும் என்று பல விஷயங்களை எதிர்பார்த்து, அதற்கு ஏற்றபடி செயல்படக் கற்றுக்கொள்ள வேண்டும்.
- வித்தியாசமாகச் செய்து சாதிக்க நினைத்தால், 'எல்லோரும் செய்வதையே நாமும் செய்வது' என்ற மந்தை மனோபாவத்திலிருந்து விடுபட வேண்டும். எதைச் சிந்திக்க வேண்டும் என்று நமக்குக் கற்றுக்கொடுக்கிறார்கள். ஆனால், எப்படிப்பட்ட சிந்தனை வேண்டும் என்று பள்ளியில் நமக்குக் கற்றுக் கொடுக்கப்படுவதில்லை. ஒவ்வொரு நாளிலும் மாற்றங்கள் நிகழும் இந்த டிஜிட்டல் யுகத்துக்கு ஈடுகொடுக்க, நாம் மாற்றங்களுக்குத் தயாராக வேண்டும்.
- சுயசிந்தனையும் சுதந்திர மனோபாவமும் கொண்ட மனிதர்களாக உருவெடுக்க வேண்டும். அதுவே எல்லாத் தடைகளையும் தகர்க்கும் வல்லமையை நமக்குக் கொடுக்கும். பிரச்னைகளில் சிக்கிக்கொள்பவராக நாம் மாறுவதிலிருந்து தடுத்து, பிரச்னைகளைத் தீர்க்க வல்லவர்களாக நம்மை மாற்றும்.

## வித்தியாசம் காட்டும் திறன்!

கல்லூரியில் தன் வகுப்புக்குக் கணித ஆசிரியர் தாமதமாக வந்தார். வகுப்பில் இருந்த குறும்புக்கார மாணவன் யாரோ அதற்குள் சேட்டை செய்திருந்தான். ஆசிரியர் உட்காரும் நாற்காலி கரும்பலகையிலிருந்து வெகு தூரத்தில் கவிழ்த்துப் போடப்பட்டிருந்தது.

ஆசிரியர் அதைப் பார்த்தார். 'யார் செய்தது' என்று கேட்டால் யாரும் சொல்ல மாட்டார்கள். அமைதியாக மாணவர்கள் பக்கம் திரும்பி, ''இன்றைக்கு உங்களுக்கு ஒரு தேர்வு வைக்கிறேன். ஒரு பேப்பரில் ஐந்து நிமிடங்களுக்குள் பதில் எழுதி என்னிடம் கொடுங்கள்'' என்றார். ''மூன்றே கேள்விகள்தான்... முதல் கேள்வி: என் நாற்காலி வழக்கமான இடத்திலிருந்து எத்தனை மீட்டர் தூரத்தில் இருக்கிறது? சரியான பதிலுக்கு ஒரு மதிப்பெண். இரண்டாவது கேள்வி: அந்த நாற்காலி இயல்பாக இல்லாமல், என்னவிதமான கோணத்தில் நிற்கிறது? சரியான பதிலுக்கு ஒரு மதிப்பெண். மூன்றாவது கேள்வி: இதை இப்படிச் செய்த மாணவரின் பெயர் என்ன? சரியான பதிலுக்கு 98 மதிப்பெண்கள். எல்லோரும் எழுதுங்கள். இந்த மாதத்துக்கான வகுப்புத் தேர்வாக இதைக் கருதுவேன்'' என்றார்.

அப்புறம் என்ன? சேட்டை செய்தவனை இந்த வித்தியாசமான தேர்வில் எல்லோரும் காட்டிக் கொடுத்துவிட்டனர்.






## திறனை வளர்க்கும் முடிவு!

தன் பேராசிரியர் ஒருவரிடம் குழப்பத்துடன் வந்து நின்றான் ஒரு மாணவன். ''என்ன?'' என்று கேட்ட பேராசிரியரிடம், ''எனக்கு ஒரே குழப்பமாக இருக்கிறது. கல்லூரியில் நடந்த கேம்பஸ் இன்டர்வியூவில் ஐந்து நிறுவனங்கள் என்னை வேலைக்கு எடுத்திருக்கின்றன. எல்லோருமே நல்ல சம்பளம் தருவதாகச் சொல்கிறார்கள். என்ன செய்வது என்று புரியவில்லை'' என்றான் அவன். ''உனக்கு எந்த நிறுவனம் பிடித்திருக்கிறது?'' என்ற கேள்விக்கு, ''எல்லாமே நல்ல நிறுவனங்கள்'' என்றான். ''எந்த வேலை பிடித்திருக்கிறது?'' என்ற கேள்விக்கும், ''எல்லாமே நல்ல வேலைதான்'' என்றான்.

பேராசிரியர் அமைதியாக அவனைக் கூட்டிக்கொண்டு தண்ணீர் ட்ரம் அருகே போனார். திடீரென அழ ஆரம்பித்தார். ''என்ன ஆச்சு சார்?'' என்று பதறினான் மாணவன். ''எனக்குத் தாகமாக இருக்கிறது. தண்ணீர் குடிக்கலாம் என்று பார்த்தால் இந்த ட்ரம் நிறைய தண்ணீர் இருக்கிறதே! இந்த எல்லாத் தண்ணீரையும் நான் எப்படிக் குடிப்பது?'' என்று கேட்டுவிட்டு அவர் திரும்பவும் அழுதார். மாணவன் குழப்பமாகி, ''ஒரு டம்ளர் தண்ணீர் குடித்தால் உங்கள் தாகம் அடங்கிவிடுமே சார்! நீங்கள் ஏன்



## முழுமையாக உணர வேண்டும்!

ஒரு அகராதியை வாங்கி மாதக்கணக்கில் புரட்டிப் படிப்பதால் மட்டுமே ஒரு மொழியைக் கற்றுக்கொள்ள முடியாது. பாடல்களைப் பல மணி நேரம் கேட்பதால் மட்டுமே ஒருவர் பாடகர் ஆகிவிட முடியாது. தொலைக்காட்சியில் நடன நிகழ்ச்சிகளைப் பார்த்து ஒருவர் நடனம் கற்றுக்கொள்ள முடியாது. இதுபோல எதையும் கற்றுக்கொள்ள ஒழுங்கு, அர்ப்பணிப்பு மற்றும் கவனத்துடன் கூடிய பயிற்சி தேவை. ஆனால், வெறும் பயிற்சி மட்டுமே கற்றுத் தந்துவிடாது. ஒரு சிறந்த குருவின் வழிகாட்டுதல் வேண்டும். ஒருவர் செய்யும் பயிற்சி சரியானதா என்பதை அவர் கவனித்து ஒழுங்குபடுத்துவார். அதன்பின் கடின உழைப்பால் அதில் திறன் பெறலாம்.

ஓர் இயந்திரம் எப்படி இயங்குகிறது என்பதை அறிந்தவர் மட்டுமே அதன் பிரச்னைகளைக் கண்டறிந்து பழுதுபார்க்க முடியும். அதுபோல ஒரு தொழில், வேலை, வியாபாரம் அல்லது கலையில் தன் மனதை முழுமையாக ஈடுபடுத்திக் கற்றுக்கொள்பவரே அதில் தேர்ந்த திறமைசாலியாக மாறுவார்.

ட்ரம்மில் இருக்கும் எல்லாத் தண்ணீரையும் குடிக்க வேண்டும்?” என்று கேட்டான்.

“இதை உனக்கு உணர்த்துவதற்காகவே நான் அழுதேன். ஐந்து வேலைகள் கிடைத்தாலும் உன்னால் ஐந்து வேலைகளுக்கும் போக முடியாது. உன் திறமைக்கு ஏற்ற வேலை எது என்று பார், எந்த வேலையில் உன் திறனை வளர்த்துக்கொள்ள முடியும் என்று பார், எது எதிர்காலத்துக்குச் சரியானது என்று பார், அந்த ஒன்றைத் தேர்வு செய். எல்லாவற்றுக்கும் ஆசைப்படாதே!” என்று அவர் சொன்னது இப்போது மாணவனுக்குப் புரிந்தது.

## பயிற்சியால் கிடைக்கும் திறன்!

இந்தியா உருவாக்கிய மிகச்சிறந்த ஹாக்கி வீரர், மேஜர் தயான்சந்த். இந்தியாவுக்காக ஒலிம்பிக் பதக்கங்களை வென்று கொடுத்தவர். அவரை ‘மேஜிக் வீரர்’ என்று அழைத்தார்கள். அவரது ஹாக்கி மட்டையில் பந்து ஒட்டிக்கொண்டதோ என்று சந்தேகப்படும் அளவுக்கு நேர்த்தியாகப் பந்தை நகர்த்திச் சென்று கோல் போடுவார். அவரது ஹாக்கி மட்டையைப் பல நடுவர்கள் சந்தேகப்பட்டுப் பரிசோதனை செய்தது உண்டு. அந்தத் திறனுக்குக் காரணம், தயான்சந்தின் தொடர் பயிற்சி.

கிரிக்கெட் விளையாட்டில் கடவுளைப் போலவே கருதப்படுகிறார் டான் பிராட்மேன். தன் 12 வயதில் கிரிக்கெட் போட்டியில் முதல் செஞ்சுரி அடித்தார் அவர். காரணம், பல மணி நேரங்கள் தொடர்ந்து செய்த பயிற்சி. தான் ஓய்வுபெற்ற கடைசிப் போட்டியிலும் பிராட்மேன் செஞ்சுரி அடித்தார். காரணம், நன்கு விளையாடும் திறன் பெற்ற பிறகும் அவர் பயிற்சியை ஒருபோதும் நிறுத்தியதில்லை.

ஒரு டாக்டரிடம் ஆபரேஷன் செய்துகொள்ளப் போவதற்கு முன்பாக, அவரது அனுபவத்தைத்தான் அளவுகோலாகப் பார்க்கிறார்கள். திரும்பத் திரும்ப ஆபரேஷன்கள் செய்து பழகிய ஒரு டாக்டர், சிக்கலான ஓர் அறுவை சிகிச்சையைக்கூடச் சிறப்பாகச் செய்து நோயாளியைக் காப்பாற்றுவார்.

ஒரு பைலட் பல நூறு மணி நேரங்கள் விமானம் ஓட்டித் தனது திறனை நிரூபித்த பிறகே அவருக்குப் பயணிகள் விமானத்தை ஓட்டுவதற்கு லைசென்ஸ் கொடுக்கிறார்கள். ஏனெனில், அத்தனை மனிதர்களைப் பத்திரமாகப் பறக்கவைத்துக் கூட்டிச்செல்லும் பொறுப்பு அந்த விமானியின் கைகளில் ஒப்படைக்கப்படுகிறது.

இடைவிடாத பயிற்சியே ஒருவரைத் திறமையாளர் ஆக்குகிறது. அவர் எவ்வளவு திறமைசாலியாக இருந்தாலும், தொடர் பயிற்சியே அந்தத் திறனை மங்கிவிடாமல் காக்கிறது.



டாடா குழுமத்தின் நிறுவனங்களில் ஒன்று, டெல்கோ. லாரிகள் போன்ற கனரக வாகனங்களை உருவாக்கி விற்கும் இந்த நிறுவனத்தில் உயர் பொறுப்பு வகித்துவந்தார் சுமந்த் மூல்கோகர். ஒவ்வொரு நாளும் உணவு இடைவேளையில் உயர் அதிகாரிகள் ஒன்றாக அமர்ந்து சாப்பிடுவார்கள். சுமந்த் பல நாட்களில் உணவு இடைவேளையின்போது அவசரமாக காரில் எங்கோ கிளம்பிப் போவார். இரண்டு மணி நேரம் கழித்துத் திரும்பி வருவார். "வெளியில் சாப்பிட்டுவிட்டேன்" என்பார்.

மற்ற அதிகாரிகளுக்குச் சந்தேகம். "நிறுவனத்தின் டீலர்கள், கான்ட்ராக்டர்கள் என்று பலருடன் சுமந்துக்கு ரகசிய டீலிங் இருக்கிறது. ஐந்து நட்சத்திர ஹோட்டலுக்கு அவரை அழைத்துச் சாப்பாடு வாங்கித் தந்து, அவர் கேட்பதையும் கொடுத்துப் பலரும் காரியம் சாதித்துக்கொள்கிறார்கள்" என்று அதிகாரிகள் மத்தியில் வதந்தி பரவியது. பலரும் அவரைச் சந்தேகப்பட்டார்கள். ஒருநாள் அவரைக் கையும் களவுமாகப் பிடிக்க முடிவெடுத்து, சில அதிகாரிகள் அவரது காரை ரகசியமாகப் பின்தொடர்ந்தனர்.

அவர்களுக்கு ஆச்சரியம்... சுமந்த் மூல்கோகரின் கார் எந்த ஐந்து நட்சத்திர ஹோட்டலுக்கும் போகவில்லை. மாறாக, நெடுஞ்சாலை ஓரத்தில் இருக்கும் சாதாரண உணவகம் ஒன்றில் போய் நின்றது. லாரி டிரைவர்கள் தங்கள் லாரிகளை நிறுத்திவிட்டுச் சாப்பிடும் ஹோட்டல் அது! அங்கே டிரைவர்கள் சாப்பிடும் எளிய உணவை வாங்கிச் சாதாரண டேபிளில் அமர்ந்து சாப்பிட்டபடி, அவர்களுடன் பேசிக்கொண்டிருந்தார் சுமந்த். டாடா தயாரிப்பான லாரிகளை ஓட்டும் டிரைவர்களின் நேரடி அனுபவங்களை இப்படிச் சந்தித்துக் கேட்டு, அவர்கள் சொல்லும் பிரச்னைகளை உள்வாங்கிக்கொள்ளவே இப்படி அவர் வருகிறார் என்பது அதன்பிறகே மற்ற நிர்வாகிகளுக்குத் தெரிந்தது. டிரைவர்களுடன் அவர்களில் ஒருவராக உட்கார்ந்து சாப்பிடும்போது அவர்களும் வெளிப்படையாகப் பேசினார்கள். அதைக் கேட்டுக்கொண்டு அவரால் தங்கள் தயாரிப்பை மேம்படுத்த முடிந்தது.

ஒரு பொருளின் தரம் மேம்பட, அதைப் பயன்படுத்தும் வாடிக்கையாளர்களின் கருத்து ரொம்பவே முக்கியம். அதைத் தானே நேரடியாகக் கேட்டு உணர்ந்து மாற்றங்களைச் செய்த சுமந்த் மூல்கோகர், பிற்காலத்தில் டாடா மோட்டார்ஸ் நிறுவனத்தின் தலைவர் பொறுப்பு வரை உயர்ந்து பிறகு ஓய்வு பெற்றார்.

டாடா நிறுவனம் உருவாக்கிய கார்களில் ஒன்று, டாடா சுமோ. பிரபலமான ஜப்பான் சுமோ வீரர்களைப் போல வலிமையான வாகனம் என்பதை

# புதிய திறன்களைப் பெறுவது எப்படி?



உணர்த்துவதற்காக இப்படிப் பெயர் வைக்கப்பட்டதாக நிறைய பேர் நினைக்கிறார்கள். அது தவறு! சுமந்த் மூல்கோகர் (Sumant Moolgaokar) என்ற திறன்மிக்க நிர்வாகிக்கு மரியாதை செலுத்தும் விதமாக அவரது பெயரின் முதல் எழுத்துகளை வைத்து உருவாக்கப்பட்டதே சுமோ.

ஒரு வேலை, தொழில் அல்லது வியாபாரத்தை வெற்றிகரமாகச் செய்து முன்னேறுவதற்குப் புதுப்புதுத் திறமைகள் எப்போதும் தேவைப்படுகின்றன. சுமந்த் மூல்கோகர் மாதிரி அப்படியான திறமைகளை நீங்கள் தேடி அடைவதற்கு என்னென்ன செய்யலாம்?

➢ வேலை அல்லது தொழிலில் உங்களின் இலக்கு என்ன என்பதைத் திட்டமிடுங்கள். அதை எப்போது அடையப் போகிறோம் என்பதையும் தீர்மானியுங்கள். அப்போதுதான் அதற்கு என்னென்ன திறன்கள் தேவை என்பது புரியும். அந்தத் திறன்களைப் பெறுவது எப்படி என்றும் வழிகளைத் தேடுங்கள். உதாரணமாக, சாதாரண கிளார்க் வேலையில் இருக்கும் ஒருவர் அந்த அலுவலகத்தின் மேற்பார்வையாளர் பதவிக்கு ஐந்து ஆண்டுகளுக்குள் உயர ஆசைப்பட்டால், அவர் அந்த நிறுவன நடைமுறைகளை ஒன்றுவிடாமல் அறிந்து கையாளும் திறன் பெற வேண்டும். சிறியதாக ஒரு கடை வைத்திருக்கும் ஒருவர், அடுத்த பத்து ஆண்டுகளுக்குள் மூன்று கிளைகள் திறக்க ஆசைப்பட்டால், தன் கடையின் நற்பெயரை வளர்த்து, வாடிக்கையாளர் தளத்தை விரிவுபடுத்தி அதற்கான தேவையை உருவாக்க வேண்டும்.

➢ சரியான வழிகாட்டி ஒருவரைப் பெறுங்கள். சுயம்புவாக ஒருவர் எல்லா விஷயங்களையும் கற்றுக்கொள்ள முடியாது. அந்தத் துறையில் அனுபவமுள்ள ஒரு வழிகாட்டி கிடைக்கும்போது, ஒருவரால் வேகமாக எல்லாவற்றையும் அறிய முடியும். முடிவு எடுக்க முடியாத நெருக்கடிகளைச் சந்திக்கும்போது ஆலோசனை பெற முடியும். தவறுகள் செய்துவிடாதபடி அவர் தடுத்துக் காப்பாற்றுவார்.

➢ கல்வி மட்டுமே ஒருவருக்குத் திறனைப் பெற்றுத் தந்துவிடுவதில்லை என்றாலும், கல்வித்தகுதி என்பது அடிப்படைத் தேவைகளில் ஒன்றாக இருக்கிறது. எதைச் செய்தாலும் அதற்குரிய கல்வித்தகுதியை அடையுங்கள். கல்வியைத் தாண்டி வேறு பயிற்சிகளையும் பெறுங்கள். ஆன்லைன் கற்றல் வாய்ப்புகள் வந்த பிறகு நிறைய வாசல்கள் திறந்திருக்கின்றன. உதாரணமாக, அக்கவுன்டிங் துறை சார்ந்த செயற்கை நுண்ணறிவுத் திறனை வளர்த்துக்கொள்ள விரும்பும் ஒருவர், அந்தத் துறையில் மிகச்சிறந்த நிபுணர் அமெரிக்காவில் இருந்தாலும், ஆன்லைனில் அவரிடம் கற்றுக்கொள்ள முடியும். இதுபோலப் புத்தகங்கள், யூடியூப் வீடியோக்கள்




என்று திறனை மேம்படுத்திக்கொள்ள ஏராளமான வழிகள் இருக்கின்றன.

➢ இன்று ஒவ்வொரு தொழில்துறைக்கும் தனித்தனியாக அமைப்புகள் உருவாகிவிட்டன. ஒரு பகுதியில் ஒரே துறையில் தொழில் அல்லது வியாபாரம் செய்பவர்கள் தங்களுக்குள் ஒருவரை ஒருவர் போட்டியாளராகக் கருதிய காலம் மாறிவிட்டது. ஒரு சங்கமாக இணைந்து தங்களுக்குள் அனுபவங்களைப் பரிமாறிக்கொள்ளும் பண்பு வந்திருக்கிறது. அதுபோன்ற அமைப்புகளில் இணைந்து பிற மூத்த நிர்வாகிகளின் அனுபவங்களைக் கேட்டுக் கற்றுக் கொள்ள முடியும். இதுபோலத் தேசிய அளவிலும், சர்வதேச அளவிலும் இருக்கும் அமைப்புகளில் இணைந்து திறன்களை மேம்படுத்திக்கொள்ளலாம்.

➢ ஒரு வேலை அல்லது தொழிலைத் தனது இலக்காக வைத்திருக்கும் ஒருவர், அதைச் சிறப்பாகச் செய்துவரும் ஒருவரிடம் போய்ப் பயிற்சி பெறலாம். அந்த நிறுவனத்தில் பயிற்சியாளராகவோ, பணியாளராகவோ சேர்ந்து, அந்த நிபுணர் என்ன செய்கிறார், எப்படிச் செய்கிறார் என்பதை நேரடியாகப் பார்த்துக் கற்றுக் கொள்ளலாம்.

➢ ஒரு திறனைக் கற்றுக்கொள்ள பொறுமை மிக அவசியம். அதற்காகப் போதுமான நேரம் ஒதுக்கிப் பயிற்சி பெறுவதும் முக்கியம். தினசரி அதைப் பயன்படுத்திப் பார்க்கவும் வேண்டும். உதாரணமாக, புதிய மொழி ஒன்றைக் கற்றுக்கொள்ளும் ஒருவர், தினசரி சில நிமிடங்களாவது அதைப் பேசிப் பார்க்க வேண்டும். புதிய கம்ப்யூட்டர் புரோகிராமோ, ஏ.ஐ தொழில்நுட்ப நடைமுறையோ கற்கும் ஒருவர், அதைத் தினமும் செயல்படுத்திப் பார்க்க வேண்டும்.

➢ ஒரு புதிய திறனைப் பழகும்போது, அதில் நாம் எப்படிச் செயல்படுகிறோம் என்று அடுத்தவர்களின் கருத்தைக் கேட்டு அறிந்துகொள்வது அவசியம். ஆரோக்கியமான விமர்சனங்களைக் கவனத்துடன் கேட்டு அதன்படி நடப்பது, நம்மை மேம்படுத்திக்கொள்ள உதவும். ●



# வளர்ச்சிக்கு வழிகாட்டும் தனித்திறன்கள்!

ஒரு கிராமத்துக்குச் சாலை அமைக்கும் பணி நடைபெற்றது. அதற்காக நிறைய பேர் பாறைகளை உடைத்துச் சின்னச்சின்ன ஜல்லிகளாக ஆக்கிக்கொண்டிருந்தார்கள். வழிப்போக்கர் ஒருவர் அதைக் கவனித்துவிட்டு அவர்களிடம் போனார்.

முதலில் இருந்த ஒருவனிடம், "என்ன செய்கிறாய்?" என்று கேட்டார். அவன் கோபமாக, ''பார்த்தால் தெரியலையா? என் தலையெழுத்து, வேற எந்த வேலையும் கிடைக்காம இந்த வெயில்ல உட்கார்ந்து கல் உடைக்கிறேன்'' என்றான். இரண்டாம் நபரிடம் அதே கேள்வியைக் கேட்டபோது, "என் குடும்பத்தினரின் பசியைத் தீர்க்கறதுக்காக நான் கல் உடைக்கிறேன்" என்றான் அவன்.

மூன்றாவதாக உட்கார்ந்திருந்த நபரிடம் கேட்டபோது, "என் ஊர்க்காரங்க எல்லோரும் நிம்மதியா தினமும் போய் வர்றதுக்காக நல்ல ரோடு போடறோம். அதுக்காகத் தரமான ஜல்லிகளை உருவாக்கிக் கொடுத்துக்கிட்டு இருக்கேன்" என்றான் அவன்.

இந்தப் பதில்கள் நமக்கு ஒரு பாடத்தைக் கொடுக்கின்றன. செய்வது ஒரே வேலைதான்! ஆனால், அதை ஒவ்வொருவரும் பார்க்கும் கோணம் மாறுபடுகிறது. ஒருவர், வேறு வழியில்லாமல் அரைமனசோடு வேலை பார்க்கிறார். அடுத்தவர் தன் குடும்பத்தின் பசி தீர்ப்பதற்காக அதை ஒரு கடமையாகச் செய்கிறார். மூன்றாம் நபர்தான், அந்த வேலையின் உன்னதமான இலக்கு எது என்பதைப் புரிந்துகொண்டு அர்ப்பணிப்புடன் செய்கிறார்.

படிக்கும் மாணவருக்கும் இந்தப் பார்வை வேண்டும். வேலை, தொழில் அல்லது வியாபாரம் செய்யும் ஒருவருக்கும் இப்படிப்பட்ட பார்வை தேவை. நாம் செய்யும் வேலை மனிதர்களுக்கு எப்படிப்பட்ட பலன்களைத் தருகிறது என்பதை யோசிக்க வேண்டும். ஒரு சாதாரண மளிகைக்கடைக்காரர் வெறுமனே பணம் வாங்கிக்கொண்டு பொருட்களைக் கொடுப்பதில்லை. தன் வாடிக்கையாளர் குடும்பம் தரமான பொருட்களை வாங்கிச் சமைத்து, ஆரோக்கியமாக வாழ்வதை அவர் உறுதி செய்கிறார்.

இப்படித்தான் 'நாம் எதற்காக இதைச் செய்கிறோம்' என்ற உன்னதமான இறுதி இலக்கை அறிந்து ஒவ்வொருவரும் இயங்க வேண்டும். அதற்கு நாம் சில தனிப்பட்ட திறன்களை வளர்த்துக்கொள்ள வேண்டும். அப்படி நம்மைச் சிறப்பானவராக மாற்றும் சில தனித்திறன்கள்:

- அறமும் நேர்மையும் அறிந்து செயல்படும் அணுகுமுறையும் ஓர் அடிப்படைத் திறமைதான்! சொல்வது ஒன்று, செய்வது வேறொன்றாக இருக்கக் கூடாது. தனிப்பட்ட வாழ்விலும், செய்யும் பணியிலும் இந்த அணுகுமுறையைக் கடைப்பிடிக்க வேண்டும். எப்படிப்பட்ட சூழலிலும் இந்த நிலை மாறக்கூடாது. இப்படிப்பட்ட நேர்மையான அணுகுமுறையைப் பின்பற்றுவது சவாலாக இருக்கலாம். ஆனால், இப்படி இருக்கும் ஒருவரை எல்லோருமே நம்புவார்கள், மதிப்புக் கொடுப்பார்கள்.

- சூழலுக்கும் ஏற்றபடி நம்மை மாற்றிக்கொள்ளும் இயல்பு வேண்டும். செய்யும் வேலையின் தன்மை மாறலாம், நிறுவனத்தில் தலைகீழ் மாற்றங்கள் வரலாம், ஒருவர் தான் செய்யும் தொழிலையே இன்றைய தேவைக்கு ஏற்றபடி

மாற்ற வேண்டி வரலாம். ஏனெனில், உலகில் மாற்றங்கள் வேகமாக நிகழ்ந்துகொண்டிருக்கின்றன. 'நான் மாற மாட்டேன், எல்லோரும் எனக்கு ஏற்றபடி மாறிக்கொள்ள வேண்டும்' என்று பிடிவாதமாக இருப்பவர்களை உலகம் புறக்கணித்துவிடும். புதிய மாற்றங்கள், புதிய சவால்களை எதிர்கொண்டு, எல்லோரின் எதிர்பார்ப்புகளையும் பூர்த்தி செய்பவர்களை மற்றவர்கள் விரும்புவார்கள்.

• எல்லோரிடமும் கண்ணியத்துடன் நடந்துகொள்வது நமக்கும், நாம் பணிபுரியும் நிறுவனத்துக்கும் மதிப்புத் தேடித் தரும். அடித்தட்டுப் பணியாளர்கள் முதல் மேலதிகாரிகள் வரை எல்லோரையும் ஒரே மாதிரி நடத்தும் பண்பு, நமக்கு எல்லோரிடமும் மரியாதையைச் சம்பாதித்துக் கொடுக்கும். அடுத்தவர்களின் உணர்வுகளைப் புரிந்துகொண்டு அவர்களுடன் அக்கறையாகப் பழகுபவர்கள், அவர்களின் இதயத்தில் இடம் பிடிப்பார்கள்.

• தெளிவான தகவல்தொடர்புத் திறன் வேண்டும். நாம் சொல்லவரும் விஷயத்தை மிகவும் தெளிவாக, குறைந்த வார்த்தைகளில், குறைவான நேரத்தில் விவரித்துவிட முடிகிற திறன் இன்றைய உலகின் அத்தியாவசியத் தேவை. அதை உணர்வுப்பூர்வமாகவும் வெளிப்படுத்த வேண்டும். ஏனெனில், பலரும் உரையாடலுக்குப் பொறுமையில்லாத அளவுக்கு பிஸியாக இருக்கிறார்கள். சரியான உணர்வுடன் தெளிவாக விவரிக்கும் உரையாடலே அவர்களை ஈர்க்கும். கண்களைப் பார்த்து நம்பிக்கையுடன் பேசுவது, நாம் சொல்லும் விஷயத்துக்குக் கூடுதல் மதிப்பை ஏற்படுத்தும்.

• குடும்பம், நண்பர்கள், அக்கம்பக்கத்தினர், அலுவலகத்தில் சக பணியாளர்கள் என்று எல்லோருடனும் நல்ல உறவை ஏற்படுத்தி வைத்திருப்பதும் ஒரு சிறந்த திறன்தான். ஒவ்வொருவரின் பலம், பலவீனம் மற்றும் ரசனைகள் அறிந்து அவர்களுடன் பழகும்போது, அந்த உறவை இன்னும் சிறப்பாக மாற்றிக்கொள்ள முடியும்.

• பணிபுரியும் இடத்தின் தேவைக்கு ஏற்றபடி நம் பணியைத் திட்டமிடும் திறனும் வேண்டும். எதற்கு முன்னுரிமை கொடுப்பது, எதை எந்த நேரத்துக்குள் முடிப்பது, எதை எதை யார் யாரிடம் பிரித்துக் கொடுப்பது என்பதை அறிந்து செயல்படும் ஒருவரால் தன் பணியைத் திறம்படச் செய்ய முடியும். நேரம் தவறாமல் வருவது, எதையும் தள்ளிப் போடாமல் செய்வது, எல்லோரையும் மரியாதையுடன் நடத்துவது என்று இருக்கும் ஒருவர் தன் தனிப்பட்ட வளர்ச்சியையும் நிறுவனத்தின் வளர்ச்சியையும் உறுதி செய்வார்.

• தன் பலம், பலவீனங்களை அறிந்து அதற்கு ஏற்றபடி தன் செயல்பாடுகளைத் தீர்மானித்துக்கொள்ளும் ஒருவர், நம்பிக்கையுடனும் தெளிவாகவும் பணிகளைச் செய்வார். சவால்களைத் தன்னம்பிக்கையுடன் எதிர்கொள்வார். அவரால் எப்படிப்பட்ட சூழலிலும் சரியான முடிவுகளை எடுக்க முடியும். சவால்களைச் சரியாக அறிந்து தீர்க்க முடியும்.

• தன்னம்பிக்கை, துணிவு, நேர்மை, புதுமையான முடிவுகளை எடுக்கும் பண்பு ஆகிய திறன்களைக் கொண்ட ஒருவர், சாதாரண பணியில் இருந்தாலும் தலைமைப்பண்புடன் திகழ்வார். மற்றவர்களையும் ஊக்கப்படுத்தி வேலைவாங்க அவரால் முடியும். அவர் செய்யும் வேலைகளிலும் நேர்த்தி வெளிப்படும். ●


RAMRAJ காட்டன் இந்தியாவின் கலாச்சாரம்

# வெண்மை

**VENMAII**

தமிழ் மாத இதழ்

மலர் 11 இதழ் 1

ஜூலை 2026

பதிப்பாளர் - கௌரவ ஆசிரியர்

**கே.ஆர்.நாகராஜன்**

ஆசிரியர்

**த.செ.ஞானவேல்**

இதழாசிரியர்

**வள்ளி**

வடிவமைப்பு

K. **உதயா**

புத்தக ஆக்கமும் வடிவமைப்பும்:

தரு மீடியா (பி) லிட்.,

எண். 188, தரை தளம்,

14வது குறுக்குத் தெரு சந்திப்பு,

டிபென்ஸ் காலனி, ஈக்காட்டுத்தாங்கல்,

சென்னை - 600 032.

கைப்பேசி: 9952920801

email: contacttharu@gmail.com



இந்தப் புத்தகத்தின் எந்த ஒரு பகுதியையும் பதிப்பாளரின் எழுத்துப்பூர்வமான முன் அனுமதி பெறாமல் மறுபிரசுரம் செய்வதோ, அச்சு மற்றும் மின்னணு ஊடகங்களில் மறுபதிப்பு செய்வதோ காப்புரிமைச் சட்டப்படி தடை செய்யப்பட்டதாகும்.



Published by
K.R. NAGARAJAN,
Published from
10, Sengunthapuram
Mangalam Road,
TIRUPUR - 641 604.
Ph: 9842274137



# நம்மிடம் தேடுவோம்!

போக்குவரத்து வசதிகள் அதிகம் இல்லாத அந்தக் காலத்தில், ராஜபாட்டை ஒன்றில் மாட்டு வண்டியிலும் நடந்துமாக ஒரு கூட்டம் சென்றது. பல ஊர்களிலிருந்து வந்தவர்கள் ஒன்றாக இணைந்து பயணம் செய்தனர். பாதுகாப்புக் காரணங்களுக்காகவும், ஒன்றாக இணைந்து சமைத்துச் சாப்பிடவும் இப்படிச் செல்வது வழக்கம்தான்.

பயணம் கடைசியாக ஒரு நகரைச் சென்றடையும் போது, அந்தக் கூட்டத்தில் இருந்த பலரும் அங்கேயே தங்கிவிட்டனர். அவர்களில் இருவர் மட்டும் தொடர்ந்து பயணம் செய்து ஒரு கடற்கரைப் பட்டினத்தை அடைய வேண்டும். இருவருக்கும் அறிமுகம் இல்லை. ஆனால், சென்றடைய வேண்டிய இடம் இருவருக்கும் ஒன்றாக இருந்தது. எனவே இருவரும் இணைந்து பயணம் செல்ல முடிவு செய்தனர். இருவருமே தங்களை வியாபாரிகள் என்று ஒருவருக்கொருவர் அறிமுகம் செய்துகொண்டனர்.

ஏழு நாட்களுக்குப் பிறகு, அவர்கள் தனித்தனியாகச் செல்ல வேண்டிய நேரம் வந்தது. முதல் பயணி அப்போது, “நண்பரே, நான் புறப்படுவதற்கு முன் ஒரு விஷயத்தை உங்களிடம் சொல்ல வேண்டும். நான் வியாபாரி இல்லை. உண்மையில் ஒரு திருடன். ஆனால் நீங்கள் என்னை விடப் பெரிய திருடன் என்று நினைக்கிறேன்” என்றார்.

இரண்டாவது பயணி சிரித்தபடி, “எப்படி?” என்று கேட்டார்.

“நீங்கள் வியாபாரி என்பதால் விலையுயர்ந்த பொருட்களும் பணமும் கொண்டு வந்திருப்பீர்கள் என்று நினைத்தேன். நீங்கள் தூங்கும்போதும், குளிக்கப் போகும்போதும், திருடலாம் என்ற நம்பிக்கையில் உங்கள் உடைமைகளில் தேடினேன். ஆனால் எதுவும் கிடைக்கவில்லை. உங்கள் தோற்றம் பெரிய பணக்காரர் என்று உணர்த்துகிறது. உங்களிடம் ஒன்றுமே இல்லையா? அல்லது நீங்களும் என்னைப் போலத் திருட்டுத் தொழில் செய்வதற்காகத் துறைமுகத்துக்குப் போகிறீர்களா?”

இரண்டாவது பயணி இன்னும் சத்தமாகச் சிரித்தபடி, “நான் பணம் கொண்டு வந்தேன். என்னிடம் விலையுயர்ந்த வைரங்களும் சில தங்க நாணயங்களும்கூட உள்ளன” என்றார்.

“ஆனால், எவ்வளவு முயற்சி செய்தும் என்னால் அவற்றை ஏன் கண்டுபிடிக்க முடியவில்லை?”


“நான் தனியாகச் செல்லும்போதெல்லாம் அவற்றை ரகசியமாக உங்கள் பையில் வைத்துவிட்டுச் செல்வேன். நீங்கள் உங்கள் பைகளில் தேட மாட்டீர்கள் என்று எனக்கு நன்றாகத் தெரியும்” என்றார் இரண்டாவது பயணி.

ஒவ்வொருவருக்குள்ளும் தனித் திறமை இருக்கிறது. ஆனால், பலரும் தங்களுக்குள் எதையும் தேடிப் பார்ப்பதில்லை. அடுத்தவர்களின் திறமையைப் பார்த்து, அவர்களின் வாழ்க்கையைப் பார்த்து, மகிழ்ச்சியைத் தொலைக்கின்றனர். எவர் ஒருவர் பிறரைப் பார்ப்பதை நிறுத்திவிட்டு, தன்னிடம் உள்ள தனித்தன்மைகளைக் காண முயல்கிறாரோ, அந்த நிமிடத்திலிருந்து அவர் மகிழ்ச்சியாக வாழலாம்.


கையில் எடுக்காத கத்தி துருப்பிடித்துப் போவது போல, பயன்படுத்தாத திறமை அதன் வீரியத்தை இழந்துகொண்டே இருக்கும். நீங்கள் என்னவாக ஆகப்போகிறீர்கள் என்பதை உங்களின் திறமைகளும், அவற்றைப் பயன்படுத்தி நீங்கள் எடுக்கும் முடிவுகளுமே தீர்மானிக்கும். நீங்கள் எப்படி ஆக நினைக்கிறீர்களோ, அதையே அடைவீர்கள். மனம் விரும்பியது நிச்சயம் கிடைக்கும்.

எனவே, அடைய வேண்டியதில் மட்டும் கவனம் செலுத்துங்கள். நாம் எதைத் தொடர்ந்து செய்கிறோமோ, அதுவாகவே ஆகிறோம். நீங்கள் விரும்பியதைச் செய்யுங்கள்; அதைத் திறமையாகச் செய்யுங்கள். ●


RAMYYAM®
SAREES • KURTIS
Product by
RAMRAJ®



Culture India™
TRADITIONAL KURTA ● MATCHING DHOTIS
by
RAMRAJ©
PURE
Festive
EXPRESSION



LINEN PARK®
SHIRTS
by
RAMRAJ©
INTO
THE
LINEN
CRAFTED FOR THE MODERN VOYAGE



RAMRAJ ©
M | mrithu ®
Bamboo Towels
Gentle
as a
Feather

RAMRAJ காட்டன் இந்தியாவின் கலாச்சாரம்

**உங்கள் வீட்டுக்கே வர வேண்டுமா?**

# வெண்மை

## சந்தாதாரர் ஆகுங்கள்!



'உயர்ந்த எண்ணங்கள் உலகம் முழுவதும் சென்றடைய வேண்டும்' என்ற உயரிய நோக்கில் மதிப்புமிக்க படைப்புகளைத் தொடர்ந்து வெளியிட்டு வருகிறது வெண்மை. இந்த மாத இதழ் ஒவ்வொரு குடும்பத்திலும் பாதுகாக்கப்படும் பொக்கிஷமாகத் திகழ்கிறது.

**ஓர் ஆண்டு சந்தா ரூ.200**

**இரண்டு ஆண்டுகள் சந்தா ரூ.380**

காசோலை/வரைவோலை மூலம் அனுப்பலாம். VENMAII என்ற பெயரில் செக்/டி.டி. அனுப்பவும். பின்புறம் உங்கள் பெயர், ஊர் எழுதவும்.

அல்லது

VENMAII என்ற வங்கிக் கணக்கில் (A/C No:1809135000000299 Karur Vysya Bank, Tirupur SR Nagar Branch - IFSC: KVBL0001809) பணம் செலுத்தி, அதன் ஒப்புகை பிரதியை படிவத்துடன் அனுப்பி வைக்கலாம்.

- மணியார்டர்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
- அனைத்து ராம்ராஜ் ஷோரூம்களிலும் சந்தா செலுத்தலாம்.

**வெண்மை**
ராம்ராஜ் வி டவர்,
10, செங்குந்தபுரம், மங்கலம் ரோடு,
திருப்பூர்-641 604.
email: venmaii@ramrajcotton.net

**சந்தா செலுத்தவும், மொத்தமாக வெண்மை இதழ்களைப் பெறவும் தொடர்புகொள்ளுங்கள்.**
**போன்:**
**0421-4304106, 98422 74137**

## ஒரே நிமிடத்தில் வெண்மை சந்தாதாரர் ஆகலாம்!

உங்கள் சந்தாவை PhonePe G Pay Net transfer மூலம் செலுத்துங்கள்.

UPI பரிவர்த்தனை மூலமும் மொபைல் போன் மூலம் வெண்மை வங்கிக் கணக்கில் சந்தா தொகையை செலுத்தலாம். வெண்மை UPI id: kvbupiqr.75626@kvb

Bharat QR code வசதியுள்ள மொபைல் பேங்கிங் ஆப் வைத்துள்ளவர்கள், அதில் இங்கே உள்ள வெண்மை வங்கிக் கணக்கின் QR code -ஐ ஸ்கேன் செய்து சந்தா செலுத்தலாம்.

பணம் செலுத்தப்பட்டதற்கான வங்கித் தகவலை Forward செய்யுங்கள். கூடவே உங்கள் முழு முகவரியையும் அலைபேசி எண்ணுடன் வாட்ஸ்அப் செய்யுங்கள். அலைபேசி எண்: 98422 74137.

**வங்கிக் கணக்கு விவரம்: Venmaii**
**A/C No: 1809135000000299**
**Karur Vysya Bank,Tirupur SR Nagar Branch**
**IFSC Code: KVBL0001809.**



## மாணவ/ மாணவியர் சிறப்பு சலுகை

**(6ம் வகுப்புக்கு மேல் படிக்கும் மாணவர்களுக்கு இந்த சலுகை பொருந்தும். சந்தா செலுத்தும்போது, மாணவர் அடையாள அட்டை நகலை இணைத்து அனுப்பவும்.)**

ஒரு வருட சந்தா: ரூ.~~200~~ ரூ.125 மட்டும். | 2 வருட சந்தா: ரூ.~~380~~ ரூ.250 மட்டும்.



## சீனியர் சிட்டிசன் சிறப்புச் சலுகை

**(60 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு இந்த சலுகை பொருந்தும். பிறந்த தேதிக்கான ஆதாரச் சான்று நகலை இணைத்து அனுப்ப வேண்டும்.)**

ஒரு வருட சந்தா: ரூ.~~200~~ ரூ.125 மட்டும். | 2 வருட சந்தா: ரூ.~~380~~ ரூ.250 மட்டும்.

ராம்ராஜ் ஷோரூம்களில் ரூ.10,000க்கு மேல் பொருட்கள் வாங்குபவர்களுக்கு

**ஒரு வருட சந்தா பரிசாக வழங்கப்படும்**



# முடிவெடுக்கும் திறன் பெறுங்கள்!

துறவி ஒருவரிடம் சென்றான் ஓர் இளைஞன். "சுயமாகத் தொழில் செய்ய ஆரம்பித்திருக்கிறேன். என்ன செய்தாலும் என்னால் வளர்ச்சியை அடைய முடியவில்லை" என்று புலம்பினான். அவனிடம் கொஞ்ச நேரம் பேசினார் துறவி. அவன் சரியான முடிவுகளை எடுக்க முடியாத குழப்பத்தில் இருக்கிறான் என்பதைப் புரிந்துகொண்டார். அதனால் அவனுக்கு அறிவுரைகள் சொன்னார்.

"வேலை, தொழில் என எதிலும் ஒருவர் வளர்ச்சி அடைய வேண்டுமானால், அவர் முதலில் தனக்குள் வளர்ச்சி அடைய வேண்டும். உன்னை முதலில் நீ புரிந்துகொள்! ஒரு வார காலத்துக்கு நீ என்னவெல்லாம் செய்கிறாய் எனக் கவனித்து எழுதி வை. எதெல்லாம் நல்ல பழக்கம், எதெல்லாம் கெட்ட பழக்கம் என்பதையும் பிரித்துக் குறித்து வை!" என்று சொல்லி அனுப்பினார்.

அதேபோல அவன் ஒரு வாரம் செய்துவிட்டுத் துறவியிடம் வந்தான். நல்லது, கெட்டது என்று தான் குறித்து வைத்திருந்த பட்டியலை அவரிடம் கொடுத்தான். துறவி வாங்கி வைத்துக்கொண்டு, "உன்னைச் சுற்றியிருக்கும் மற்றவர்களின் செயல்களை ஒரு வாரம் இதே போலக் கவனித்துப் பட்டியல் போட்டுக்கொண்டு வா" என்று அனுப்பி வைத்தார். அவன் அதையும் செய்தான்.

துறவி இரண்டு பட்டியலையும் ஒப்பிட்டுப் பார்த்தார். இளைஞன் எதையெல்லாம் மற்றவர்களின் கெட்ட பழக்கங்களாக மதிப்பிட்டிருந்தானோ, அதையெல்லாம் தன்னிடம் உள்ள நல்ல பழக்கங்கள் என்று குறித்து வைத்திருந்தான். இந்த வித்தியாசத்தை அவனிடம் சுட்டிக் காட்டிய துறவி, "உன் தவறுகளை நீ சரி செய்துகொண்டால்தான் வளர்ச்சி கிடைக்கும்" என்று புரியவைத்தார்.

நல்ல முடிவுகளை எடுக்கும் விஷயத்தில் பலரும் தவறு செய்கிறார்கள். ஒரு குறிப்பிட்ட முடிவு சரியானது என்று நாம் நினைப்பதால் மட்டுமே அது சரியான முடிவாக இருந்துவிடாது. வாழ்க்கையில் முடிவெடுக்கும்போது பலரும் ஏன் தவறுகள் செய்கிறார்கள் என்பதைப் புரிந்துகொண்டால், சரியான முடிவுகளை எடுக்கும் திறனைப் பெறலாம். அந்தத் தவறுகள் என்னென்ன?

- **தவறாக உறுதி செய்வது:** பலரும் தாங்கள் நம்பும் ஒரு விஷயத்தைச் சரியா, தவறா என்று ஆராய்ந்து பார்ப்பதில்லை. தாங்கள் நம்புவதாலேயே

அதுதான் சரி என்று உறுதியாக முடிவெடுக்கிறார்கள். தங்கள் நம்பிக்கையை ஆதரிக்கும் விஷயங்களை மட்டுமே உண்மை என நினைக்கிறார்கள். எதிரான விஷயங்களைப் பொய் என நிராகரிக்கிறார்கள். உதாரணமாக, தடுப்பூசி போடுவது ஒரு குழந்தையைப் பல நோய்களிலிருந்து தடுக்கும் என்பது மருத்துவர்கள் கூறும் உண்மை. அதே சமயத்தில் தடுப்பூசிக்கு எதிரான பிரசாரத்தையும் சிலர் செய்கிறார்கள். தடுப்பூசி போடுவதால்தான் நோய்கள் வருகின்றன என்று அவர்கள் வாதிடுகிறார்கள். இதை நம்பும் ஒருவர், இணையதளங்களில் தேடி தனக்கு ஆதரவான கருத்துகளை மட்டுமே படித்து முடிவெடுப்பார். தடுப்பூசிகளின் நம்பகத்தன்மை, அதன் பின்னால் இருக்கும் அறிவியல் உண்மைகள், அவற்றின் பாதுகாப்பு குறித்த ஆதாரங்கள் எல்லாவற்றையும் நிராகரிப்பார். உண்மை எது என்று எப்போதும் தேட வேண்டும். நாம் நம்பும் கருத்தே உண்மை எனக் கண்மூடித்தனமாக வாதாடக்கூடாது.


• **முதலீட்டை நினைத்து நம்புவது:** ஒருவர் நிறைய பணத்தையும் நேரத்தையும் முதலீடு செய்து ஏதோ ஒன்றைத் தொடங்கியிருப்பார். அவர் அப்படி முதலீடு செய்துவிட்டதாலேயே அது வெற்றி பெற்றுவிடும் என நம்புவது இரண்டாவது தவறு. நிறைய பக்தர்கள் வந்து வழிபடும் கோயில் இருக்கும் ஒரு பகுதியில் ஒருவர் ஹோட்டல் ஆரம்பித்தார். கோயிலை விட்டு வெளியில் வரும் வழியில் முதல் ஹோட்டலாக தன்னுடையது இருக்க வேண்டும் என்று தீர்மானித்து அவர் இடத்தைத் தேர்வு செய்தார். மற்ற ஹோட்டல்கள் எல்லாமே தூரத்தில் இருந்தாலும், அவற்றில் கூட்டம் முண்டியடித்தது. தன் ஹோட்டலுக்கு அதைவிட அதிகக் கூட்டம் வரும் என அவர் நம்பினார். ஆனால், மற்ற ஹோட்டல்களில் நிறைய பார்க்கிங் வசதி இருந்தது. கோயிலை ஒட்டிய நெரிசலான பகுதியில் திறக்கப்பட்ட அவர் ஹோட்டலில் டூவீலரை நிறுத்தக்கூட இடம் இல்லை. அதனால் கூட்டமே வரவில்லை. அவர் தன் தவறை உணராமல், "மக்களுக்கு ரசனையே இல்லை" என்று குற்றம் சாட்டினார். எந்த ஒரு முதலீட்டு முடிவுக்கு முன்பும், எல்லா விஷயங்களையும் ஆராய்ந்து பார்க்க வேண்டும்.

• **முதல் தகவலை நம்புவது:** ஒரு கடையில் பொருள் வாங்கப் போவார் ஒருவர். அங்கே 500 ரூபாய் விலை சொல்கிறார்கள். அடுத்த கடைக்குப் போனால் அதற்கு 450 ரூபாய் விலை சொல்கிறார்கள். 'அந்தப் பொருளின் மதிப்பை எல்லோரும் உயர்த்திச் சொல்கிறார்கள்' என்று நம்பும் அவர், மூன்றாவது கடையில் போய் அதை 400 ரூபாய்க்குப் பேரம் பேசுவார். ஒரு வேலையை ஒருவரிடம் சொல்லும்போது, "மூன்று நாட்களில் முடிக்கிறேன்'' என்பார். மூன்று நாட்கள் கழித்து, "இன்னும் இரண்டு நாள் ஆகும்" என்று அவர் சொன்னால் எரிச்சல் வரும். முதலிலேயே அவர், "ஐந்து நாட்கள் ஆகும்" எனச் சொல்லியிருந்தால் இப்படி எரிச்சல் வந்திருக்காது. உண்மை எது என்று பார்க்க வேண்டுமே தவிர, முதலில் கேள்விப்படுவதை நம்பக்கூடாது.

• **நினைவில் நிற்பதை நம்புவது:** கோரமான ஒரு விமான விபத்தைப் பற்றிப் படித்தால், அந்தச் செய்தி நீண்ட நாட்களுக்கு நினைவில் நிற்கும். அதைவைத்து, 'விமானத்தில் பயணம் செய்வதே ஆபத்தானது' என்று பலரும் நம்புகிறார்கள். ஆனால், சாலை மற்றும் ரயில் விபத்து மரணங்கள் அதைவிட அதிகம். இருப்பதிலேயே பாதுகாப்பானது விமானப் பயணம்தான். என்றாலும், நினைவில் தங்கிய செய்தி ஒன்று, அதை நம்பவிடாமல் செய்கிறது. இப்படித்தான் யாரோ ஒரு நண்பர் எப்போதோ சொன்னதை வைத்து ஒரு வேலையைக் கடினம் என நம்புகிறோம், ஓர் உணவைச் சரியில்லை என்போம். நாம் ஒரு விஷயத்தை ஒருவிதமாக நினைவில் வைத்திருப்பதாலேயே அது உண்மை ஆகிவிடாது.

• **இழப்பை நினைத்து அஞ்சுவது:** ஒரு வெற்றியில் கிடைக்கும் மகிழ்ச்சியைவிட, தோல்வியில் அனுபவிக்கும் வலி மிகப்பெரியது. பலரும் வெற்றிக்கதைகளை மட்டுமே படிக்கிறார்கள். அந்த வெற்றியாளர்களை மட்டுமே பின்பற்றுகிறார்கள். ஒரு வெற்றியாளர் செய்த அதே விஷயத்தைச் செய்து தோற்றவர்கள் நிறைய பேர் இருப்பார்கள். வெற்றியைப் பலரும் கொண்டாடுவதால் அதற்கு வெளிச்சம் கிடைத்து எல்லோருக்கும் தெரிகிறது. தோல்வி இருளில் மறைந்து போகிறது. தோற்றவர்களின் கதையையும் படிக்க வேண்டும். அவையும் வெற்றிக்கு வழிகாட்டும். ●





# இளமை அனுபவங்களால் திறன் பெறுங்கள்!

கல்வியை முடித்து வேலைக்குச் செல்லும் பருவத்துக்குள் சில வாழ்க்கைக் கலைகளைக் கற்றுக்கொள்வது நல்லது. வேலைக்குச் சென்றாலும், சொந்தமாகத் தொழில் செய்தாலும், இந்தக் கலைகள் உங்களின் முன்னேற்றத்துக்கு உதவும். வாழ்க்கையை சிக்கல் இல்லாமல் வாழவும் வழிகாட்டும். அனுபவங்கள் மூலம் கற்றுக்கொள்ள வேண்டிய பாடங்கள் இவை:

- நம்மைச் சுற்றியிருக்கும் எல்லா மனிதர்களும் தங்களைப்பற்றிய கனவுகள் மற்றும் சிந்தனைகளுடன்தான் வாழ்கிறார்கள். உங்களின் வாழ்க்கை பற்றி அவர்கள் ஓரளவுக்குமேல் அக்கறைகாட்ட வாய்ப்பில்லை. அவர்களைத் தூண்டிவிட்டு உங்களுக்காக ஓர் உதவி கேட்பதோ, உங்களுக்காக ஒரு வேலையை செய்யச் சொல்வதோ சாமர்த்தியமான செயல். அவர்களைப் பாராட்டியோ, புகழ்ந்தோ காரியம் சாதிக்கப் பாருங்கள்.
- சில தருணங்களில் உங்களைத் தற்காத்துக்கொள்ளச் சண்டை போட வேண்டியிருக்கும். யாருடன் சண்டை போடுவது, எதற்காகச் சண்டை போடுவது, உங்களின் நியாயத்தை எப்படி உணர்த்துவது என்று அறிந்து செயல்பட வேண்டும். அதற்காக யாரையும் வெறுக்காதீர்கள். அந்தத் தருணத்துடன் அந்தச் சண்டையை மறந்துவிடுங்கள்.
- சில இடங்களில் ஒன்றும் தெரியாதவர் போல இருக்க வேண்டும். சில இடங்களில் உங்களுக்குத் தெரிந்த எல்லாவற்றையும் வெளிப்படுத்த வேண்டும். சில நண்பர்களிடம் மனம் திறந்து பேசலாம், சில இடங்களில் ரகசியங்களைச் சொல்லக்கூடாது. எங்கு, எப்படி நடக்க வேண்டும்... யாரிடம் என்ன பேச வேண்டும் என்று ‘பழகும் கலை’ அறியுங்கள்.
- மற்றவர்கள் பற்றி அறிவதற்கு முன்பாக நாம் நம்மைப் பற்றி அறிய வேண்டும். அதற்கு, நியாயமான சுய விமர்சனம் செய்துகொள்ள வேண்டும். நம் பலம் என்ன, பலவீனம் என்ன, என்னென்ன பழக்கங்களை நாம் கைவிட வேண்டும், எப்படிப்பட்ட மனிதராக மாற வேண்டும் என்று தெளிவாக அறிவது நம் உயர்வுக்கு உதவும்.
- எதையும் கேள்வி கேட்பது, சந்தேகப்படுவது, அதிகம் அறிந்துகொள்ள முற்படுவது, நம் வளர்ச்சிக்கான முதல் படி. யார் எதைச் சொன்னாலும் அதற்கான ஆதாரம் தேடுங்கள். விருப்பு வெறுப்புகள் இல்லாமல் அதைப் பற்றி அலசிப் பாருங்கள். அது நமக்கு எந்த வகையில் பயனுள்ளது என்று பார்த்து ஏற்றுக்கொள்ளுங்கள்.
- பேசுவது ஒரு கலை. ஒரு விஷயத்தை எப்படிப் பேசுவது, எப்போது பேசுவது, யாரிடம் பேசுவது என்பது பேச்சின் அடிப்படை இலக்கணம். தேவையற்ற விவாதங்களைத் தவிர்ப்பது நம் நேரமும் சக்தியும் வீணாவதைத் தடுக்கும். தேவையான இடங்களில் பேசுவது, நம்மைப் பற்றி மற்றவர்களுக்கு உணர்த்த உதவும்.
- வெற்றியைக் கொண்டாடவும், தோல்வியில் சோகமடையவும் எல்லோரும் பழகியிருப்பார்கள். ஆனால், சில வெற்றிகளில் பிரச்னைகளும் மறைந்திருக்கும். சில தோல்விகளில் அனுபவங்களும் கிடைக்கும். வெற்றியையும் தோல்வியையும் ஒரே மாதிரி மனநிலையுடன் அணுகுவதற்குக் கற்றுக்கொள்ளுங்கள். அவை தரும் பாடங்களை மறக்காதீர்கள்.



# ஸ்மார்ட் திறமைகளைப் பெறுங்கள்!

டெக்னாலஜி வளர்ச்சி உச்சம் தொட்டிருக்கும் இன்றைய காலகட்டத்துக்கு ஏற்றபடி, ஸ்மார்ட் திறமைகளுடன் இருப்பவர்களே எந்த வேலைவாய்ப்புக்கும் ஏற்றவராக மாற முடியும். வேலைவாய்ப்பு, தொழில் மற்றும் வியாபாரம் என்று எதிலும் முதன்மை பெறுவதற்குக் கீழ்க்காணும் திறன்களை வளர்த்துக்கொள்ளுங்கள்...

**வித்தியாசச் சிந்தனை:** ஒரு பிரச்னை அல்லது நெருக்கடி ஏற்படும்போது கையைப் பிசைந்துகொண்டு நிற்பதோ, அல்லது வேறு யாரோ சமாளித்துக் கொள்வார்கள் என்று அமைதியாகக் காத்திருப்பதோ சரியான அணுகுமுறை அல்ல. வித்தியாசமாகச் சிந்தித்துத் தீர்வுகளைத் தேடும் மனிதர்களையே நிறுவனங்கள் விரும்புகின்றன. துறை சார்ந்து கற்றுக்கொண்டு, ஒவ்வொரு வேலைத்திட்டத்துக்கும் ஏற்றபடி சுய சிந்தனையுடன் முடிவெடுக்கும் திறன் வேண்டும்.

**தலைமைப்பண்பு:** ஒரு நிறுவனத்தில் தலைமைப் பொறுப்பில் இருப்பவர் மட்டுமே முடிவெடுக்க வேண்டும் என்ற நிலை இப்போது மாறிவிட்டது. எல்லோரின் யோசனைகளும் மதிக்கப்படுகின்றன. குழுவாகச் சேர்ந்து வேலை செய்யும் இடங்களில், அந்தக் குழுவே இணைந்து முடிவுகளை எடுக்கிறது. எனவே, சிறந்த முடிவுகளை எடுக்கும் திறன் பெறுங்கள்.

**ஒருங்கிணைதல்:** மற்றவர்களோடு இணைந்து செயல்பட விரும்பாமல் தனித் தீவாக ஒதுங்கி இருப்பவர்களை நிறுவனங்கள் விரும்புவதில்லை. எல்லோரையும் உற்சாகப்படுத்தி வேலை வாங்கி, தாமும் உற்சாகமாக உழைக்கும் மனிதர்களே விலைமதிக்க முடியாத சொத்துகள். எப்படிப்பட்ட மனிதர்களுடனும் இணைந்து உழைக்கத் தயாராக இருங்கள்.

**தொடர்பு எல்லையில் இருத்தல்:** ஒரு முக்கியமான தருணத்தில் உங்களைத் தேடும்போது, எவரும் தொடர்புகொள்ள முடிகிறபடி இருங்கள். நெருக்கடியான தருணங்களில் உங்களிடம் வருகிற வேலைகளைத் தட்டிக் கழிக்கக் காரணம் தேடாதீர்கள். 'இவரை நம்பி எந்தப் பொறுப்பையும் ஒப்படைக்கலாம்' என்ற பெயரை வாங்குங்கள்.

**தெளிவாகச் சொல்லுதல்:** மேலதிகாரிகளிடமோ, சக ஊழியர்களிடமோ, தங்களுக்குக் கீழே வேலை பார்ப்பவர்களிடமோ, தெளிவான தகவல்தொடர்பு முக்கியம். 'இரண்டையும் இரண்டையும் கூட்டினால் நான்கு வரும்' என்பது போன்ற எளிமையான விஷயங்களைக்கூடத் தெளிவாக விளக்கிவிடுங்கள்.

**புதுமை செய்தல்:** வழக்கமாகச் செய்யும் ஒரு வேலையைக்கூடப் புதுமையான வழிமுறையில் செய்யும்போது, அது எளிமையாக முடியலாம்; சீக்கிரம் செய்துவிடலாம். இப்படிப் புதுமை செய்து நேரத்தையும் செலவையும் குறைப்பவர்களை எல்லா நிறுவனங்களும் விரும்பும்.

**அனுசரித்துப் போதல்:** வேலை நேரத்தைத் தாண்டியும் சில நாட்களில் வேலை பார்க்க நேரிடலாம். சில நேரங்களில் உங்கள் வேலைகளைக் கடந்து அடுத்தவர்களின் வேலைகளையும் பகிர்ந்துகொண்டு செய்ய வேண்டியிருக்கலாம். இப்படி எல்லாவற்றுக்கும் அனுசரித்துப் போகும் திறன் உள்ளவர்களுக்கு மதிப்பும் வளர்ச்சியும் கிடைக்கும்.

**வளரச் செய்தல்:** நீங்கள் எந்தத் துறையில் எப்படிப்பட்ட வேலை செய்தாலும், அந்த வேலை சார்ந்து உங்கள் நிறுவனம் உயர வேண்டும். நீங்கள் செய்யும் வேலையின் மூலம் லாபம் பெருக வேண்டும். வளர்ச்சியில் ஒரு தூணாக இருப்பதுதான் ஒருவருக்கு மதிப்பைப் பெற்றுக் கொடுக்கும்.

**தகவல் கொடுத்தல்:** கற்றல் மற்றும் அனுபவத்தின் மூலம் பெறும் எல்லாத் தகவல்களையும் விரல்நுனியில் வைத்திருங்கள். நீங்கள் பணிபுரியும் நிறுவனத்தில் பல நேரங்களில் இது தேவைப்படும். 'இப்படி ஒரு சூழலில் இந்த முடிவை முன்பு நாம் எடுத்திருக்கிறோம்', அல்லது 'இவர்கள் இப்படி முடிவெடுத்தார்கள்' என்று சொல்லி வழிநடத்த இது உதவும். ●




# வி.ஐ.டி ஸ்டார்ஸ் தின நிகழ்வில் ராம்ராஜ்!

**வே**லூர் வி.ஐ.டி பல்கலைக்கழகம் நடத்திய ஸ்டார்ஸ் தின விழாவில் ராம்ராஜ் காட்டன் நிறுவனர் திரு.கே.ஆர்.நாகராஜன் அவர்கள் முதன்மை விருந்தினராகப்பங்கேற்றார். விழாவுக்கு வி.ஐ.டி வேந்தரும் முன்னாள் அமைச்சருமான திரு.கோ.விசுவநாதன் அவர்கள் தலைமை தாங்கினார். வி.ஐ.டி துணைத் தலைவர்கள் திரு. சங்கர் விசுவநாதன், திரு. சேகர் விசுவநாதன் ஆகியோர் விழாவில் பங்கேற்றனர்.

சிறப்புரையாற்றிய திரு. கே.ஆர்.நாகராஜன், ‘‘கிராமப்புற மற்றும் பின்தங்கிய மாணவர்களுக்கு உயர்கல்வி மற்றும் வேலைவாய்ப்பைச் சாத்தியமாக்கி, அவர்களின் எதிர்காலத்தை வளம்பெறச் செய்யும் சேவையாக ‘ஸ்டார்ஸ்’ திட்டம் உள்ளது. இதன்மூலம் ஆயிரக்கணக்கான மாணவர்களின் வாழ்வை வி.ஐ.டி பல்கலைக்கழகம் மாற்றியமைத்துள்ளது. வறுமையில் வாடிய குடும்பங்களில் இன்று இந்த மாணவர்கள் மூலம் மகிழ்ச்சியும், பொருளாதாரச் சுதந்திரமும் பொங்கி வழிகிறது. இத்திட்டத்தின் மூலம் பயனடைந்த மாணவர்கள், நம் சமூகத்துக்கும் பெருமை சேர்த்து வருகிறார்கள். வி.ஐ.டி ஸ்டார்ஸ் திட்டத்தின் முன்னாள் மாணவியான திருமதி.ஜெ.கவிதா அவர்கள் இன்று தமிழ்நாடு அரசில் துணை மாவட்ட ஆட்சியராக உயர்ந்துள்ளது இதற்கு உதாரணம். அவரும் இந்த விழாவில் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்றுள்ளார். ‘ஸ்டார்ஸ்’ திட்டத்தில் பயனடைந்தோர், தங்கள் வருமானத்தின் ஒரு பகுதியை இந்தத் திட்டத்திற்கு நன்கொடையாக வழங்கி அடுத்த தலைமுறைக்கு உதவுவதைக் கண்டு வியந்தேன். ‘ஸ்டார்ஸ்’ திட்டம் என்ற சுயநலமற்ற சேவை என்றென்றும் தொடர வேண்டும்’’ என்று வாழ்த்துத் தெரிவித்தார்.













# மனிதவள மேம்பாட்டு நிகழ்வில் ராம்ராஜ்!

**கோ**வை உற்பத்தித்திறன் குழு (Coimbatore Productivity Council) சார்பில் மனிதவள மேம்பாட்டுக் கருத்தரங்கு (HR Conclave) கோவையில் நடைபெற்றது. இதை ராம்ராஜ் காட்டன் நிறுவனர் திரு.கே.ஆர்.நாகராஜன் அவர்கள் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்று, குத்துவிளக்கேற்றித் தொடங்கி வைத்தார். சுவாமி சுகபோதானந்தா, கார்ப்பரேட் மென்டார் டாக்டர் கவிதாசன், கோவை உற்பத்தித்திறன் குழுவின் தலைவர் திரு.S.சுதாகர் ஆகியோர் உள்பட பலர் நிகழ்வில் பங்கேற்றனர்.

சிறப்புரையாற்றிய திரு.கே.ஆர்.நாகராஜன். ‘‘திறமையைக் கண்டுபிடிப்பது சாதனை அல்ல, ஒருவரின் திறமையை மலரச் செய்வதுதான் சாதனை. நாம் மனிதர்களை வேலைக்கு எடுப்பதில்லை. அவர்களின் கனவுகளையும் பொறுப்புகளையும் அடையாளம் கண்டு, அவர்களை ஒரு நிறுவனத்துக்குள் வரவேற்கிறோம். ஒரு நிறுவனத்துக்கான கதவைத் திறந்துவைப்பது முதலீடு, அதன் எதிர்காலத்துக்கான வாசலைத் திறந்து வைப்பது மனிதவளம். ஒரு நிறுவனம் வளர வேண்டும் என்றால், லாபம் வளர வேண்டும், தலைமுறைகள் வளர வேண்டும், அதற்கு ஏற்ற மனிதவளம் உருவாக வேண்டும். அதனால்தான் நான் எப்போதும் ஒரு விஷயத்தைச் சொல்வேன், நல்ல நிறுவனங்கள் பொருட்களை உருவாக்கும்; சிறந்த நிறுவனங்களே மனிதர்களை உருவாக்கும்!” என்று பெருமையுடன் குறிப்பிட்டார்.

# வனத்துக்குள் திருப்பூர் திட்ட விழாவில் ராம்ராஜ்!

**தி**ருப்பூர் பகுதியில் 25 லட்சத்துக்கும் மேற்பட்ட மரக்கன்றுகளை நட்டு சாதனை புரிந்துவரும் ‘வனத்துக்குள் திருப்பூர்’ அமைப்பின் 12–வது திட்டத் துவக்க விழா, அவிநாசி ரேவதி மெடிக்கல் நர்சிங் கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது. ராம்ராஜ் காட்டன் நிறுவனத் தலைவரும் வனத்துக்குள் திருப்பூர் அமைப்பின் அறங்காவலருமான திரு.K.R.நாகராஜன் அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு வாழ்த்துரை வழங்கினார். தொழில் வளத்தில் மட்டுமின்றி, சமுதாய அக்கறையுடன் கூடிய இயற்கைச் சூழல் மற்றும் சுற்றுப்புற மேம்பாடு சேவைகளிலும் திருப்பூர் மாநகரம் தமிழ்நாட்டுக்கு முன்னோடியாகத் திகழ்கிறது என்று அவர் அப்போது குறிப்பிட்டார்.

இந்த விழாவைத் தமிழ்நாடு கால்நடைப் பராமரிப்புத்துறை அமைச்சர் மாண்புமிகு S.கமலி அவர்கள் துவக்கி வைத்தார். திருப்பூர் வடக்குத் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர் திருமதி.V.சத்தியபாமா அவர்களும், திருப்பூர் தெற்குத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு.S.பாலமுருகன் அவர்களும் முன்னிலை வகித்தனர். மாவட்ட ஆட்சியர் மருத்துவர் மணீஷ் நாரணவரே அவர்கள் தலைமை தாங்கினார். விழாவுக்கான ஏற்பாடுகளைத் திருப்பூர் ரேவதி மருத்துவமனையின் தலைமை மருத்துவர் திரு.ஈஸ்வரமூர்த்தி அவர்கள் செய்திருந்தார்.



# வேலையை அடைவதற்குத் தேவைப்படும் திறன்கள்!

ஆப்பிள் கம்ப்யூட்டர் நிறுவனத்தின் தலைவராக இருந்த ஸ்டீவ் ஜாப்ஸ் தனது நிறுவனத்தின் இரண்டாம் கட்டத் தலைவர்களிடம் அடிக்கடி சொல்லும் ஒரு கதை புகழ்பெற்றது. ஒருநாள் ஸ்டீவ் ஜாப்ஸின் அலுவலக அறை சுத்தம் செய்யப்படாமல் இருந்தது. குப்பைத்தொட்டியிலும் குப்பைகள் அப்படியே இருந்தன. துப்புரவுப் பணியாளரை அழைத்து விளக்கம் கேட்டார் ஸ்டீவ் ஜாப்ஸ். 'காலையில் வழக்கம் போல வந்து கதவைத் திறந்து அறையைச் சுத்தம் செய்ய முயன்றேன். ஆனால், கதவில் பூட்டை மாற்றியிருந்தார்கள் போலிருக்கிறது. என்னிடம் புதுப் பூட்டுக்கான சாவி இல்லை. அதனால் சுத்தம் செய்யவில்லை' என்று காரணம் சொன்னார் பணியாளர்.

"பூட்டை இரவு மாற்றியது உண்மைதான். அந்தத் தூய்மைப் பணியாளர் உடனே செக்யூரிட்டியிடம் சொல்லியிருந்தால், புதுச் சாவி கொண்டுவந்து திறந்திருப்பார்கள். தன் வேலையை முடிக்க வேண்டும் என்ற எண்ணம் அவருக்கு இல்லை. ஒரு காரணமே போதுமானதாக இருந்தது. ஆனால், ஒரு வேலையை முடிக்காமல் போவதற்கும், ஒரு செயல் தோல்வி அடைவதற்கும் காரணங்களை மட்டுமே சொல்பவர்களை நிறுவனங்கள் விரும்புவதில்லை" என்பார் ஸ்டீவ் ஜாப்ஸ்.

நிறைய பேர் வேலை தேடுவது போலவே, தங்களுக்குத் தகுதியான நபர்கள் வேண்டும் என்று நிறுவனங்களும் இன்னொரு பக்கம் தேடிக்கொண்டிருக்கின்றன. இந்த எதிர்பார்ப்புகளும் பொருத்தமாக இருக்கும் தருணத்தில், ஒருவருக்கு வேலை கிடைக்கிறது. கம்ப்யூட்டர் புரோகிராமிங் தெரிந்திருப்பது, ஆங்கில அறிவு, மார்க்கெட்டிங் திறமை போன்ற ஒரு வேலைக்கான தனிப்பட்ட தகுதிகளைத் தாண்டி ஒருவரிடம் எப்படிப்பட்ட பொதுவான திறன்கள் இருந்தால் வேலை கிடைக்கும்?

- **தகவல்தொடர்புத் திறன்:** ஒரு விஷயத்தைத் தெளிவாகப் புரிந்துகொண்டு அடுத்தவர்களுக்கு எடுத்துச் சொல்லும் திறன் வேண்டும். சக ஊழியர்களுடனும், வேலை சார்ந்து தொடர்புகொண்டு பேச வேண்டிய அனைவருடனும் சரியாக உரையாடும் திறமை தேவை. கோபம், எரிச்சல் போன்ற எதிர்மறை உணர்வுகளை வெளிப்படுத்தாமல் பேசுவது முக்கியம். 'லோன் வேண்டுமா?' என்று கேட்டு போனில் பேசும் பணியாளர்களிடம் நாம் எவ்வளவு எரிச்சல் காட்டினாலும் அவர்கள் கனிவாகப் பேசுவார்கள். அதுதான் தகவல்தொடர்புத் திறன்.

- **கவனிக்கும் திறன்:** பேசுவது போலவே, அடுத்தவர்கள் பேசுவதைப் பொறுமையாகக் கவனிக்க வேண்டும். 'நாம் சொல்வதை இவர் அக்கறையுடன் காதுகொடுத்துக் கேட்கிறார்' என்ற உணர்வை, நம்மிடம் பேசுகிறவர்களுக்கு ஏற்படுத்த வேண்டும். முக்கியமான விஷயங்களைக் குறிப்பு எடுத்துக்கொள்ளலாம். வேலை சார்ந்து ஒருவருடன் உரையாடும்போது இதையெல்லாம் செய்பவரை எல்லோரும் விரும்புவார்கள்.

• **டெக்னாலஜி திறன்:** சாதாரண வேலைகளில்கூட தொழில்நுட்பங்கள் அறிமுகமாகிவிட்ட காலம் இது. அலுவலகத்தில் எல்லோரும் கம்ப்யூட்டரில் டைப் செய்யும்போது, 'நான் இப்போதும் கையால்தான் எழுதுவேன்' என்று அடம்பிடிக்கும் ஒருவருக்கு எந்த நிறுவனத்திலும் வரவேற்புக் கிடைக்காது. வரும் இமெயில்களுக்கு எப்படி பதில் எழுதுவது என்று தெரியாமல் விழிக்கும் ஒருவரை மற்றவர்கள் அருகில் சேர்க்க மாட்டார்கள். எந்த வேலையையும் மற்றவர்களைவிட விரைவாக முடிக்கும் வழிகளை அறிந்தவர்களுக்கு நிச்சயம் வேலை கிடைக்கும்.

• **கனிவான சேவைத் திறன்:** செய்யும் ஒரு வேலை சார்ந்து பல்வேறு விதமான மனிதர்களைத் தொடர்புகொள்ள வேண்டிய சூழல் வரும். நிறுவனத்தின் வாடிக்கையாளர்களிடம் பேசும்போது, அவர்கள் சொல்லும் குறைகளை அக்கறையுடன் கேட்டுத் தீர்த்து வைக்க வேண்டும். தவறு செய்யும் பணியாளர்களிடம் கண்டிப்பு காட்டும்போதும் கவனமாக வார்த்தைகளைப் பயன்படுத்த வேண்டும். சப்ளையர்கள், விநியோகஸ்தர்கள் என்று நிறுவனத்துடன் வர்த்தகரீதியாகத் தொடர்பில் இருப்பவர்களிடம் பணிவும் கனிவுமாகப் பேச வேண்டும்.

• **பழகும் திறன்:** இன்றைய சூழலில் யாரும் தனியாக ஒதுங்கி இருக்க முடியாது. குழுவாக இணைந்துதான் பணி செய்ய முடியும். பல அலுவலகங்களிலும் இப்படிப்பட்ட டீம் ஒர்க் கலாசாரம் வந்துவிட்டது. அப்படி இல்லாத இடங்களிலும்கூட, அடுத்தவர்களின் உதவியுடன்தான் வேலைகளைப் பார்க்க வேண்டும். உங்கள் உதவியும் அடுத்தவர்களுக்குத் தேவைப்படும். எனவே, சக ஊழியர்களுடன் இனிமையாகப் பழகும் திறன் இல்லாவிட்டால், அலுவலகச் சூழலில் ஒட்ட முடியாது.

• **நேர நிர்வாகத் திறன்:** எல்லோரும் சரியான நேரத்துக்கு வரும் ஓர் அலுவலகத்தில், எப்போதும் தாமதமாக வரும் ஒருவரை யாரும் விரும்ப மாட்டார்கள். அதேபோல எந்த வேலையையும் குறித்த நேரத்தில் முடிக்காமல் தள்ளிப்போடும் மனிதர்களையும் நிறுவனங்கள் விரும்பாது. நேர நிர்வாகத் திறன் மிக முக்கியம்.

• **நிர்வாகத் திறன்:** வேலைகளை எப்படி முடிப்பது என்பதைக் கச்சிதமாகத் திட்டமிடுவது, சரியான முடிவுகளை எடுப்பது, துணிந்து ரிஸ்க் எடுப்பது, எந்த வேலையை யார் சிறப்பாகச் செய்வார் என்பதை அறிந்து அவர்களுக்கு அந்தப் பொறுப்பைக் கொடுப்பது, அடுத்தவர்களுக்குச் சொல்லிக் கொடுப்பது, எல்லோருக்கும் அவர்கள் தெரிந்திருக்க வேண்டிய தகவல்களைப் பரிமாறுவது, தேவைக்கு ஏற்றபடி கூடுதல் நேரம் உழைப்பது ஆகியவை எல்லாமே நிர்வாகத் திறன்கள். இவை எப்படிப்பட்ட வேலைக்கும் தேவைப்படும் திறமைகள்.

• **தீர்வுகளைத் தேடும் திறன்:** ஒரு பிரச்னை வரும்போது 'என்ன செய்வது' என்று தலையில் கைவைத்துக்கொண்டு உட்காரவும் கூடாது. 'இதற்கு என்ன தீர்வு' என்று அடுத்தவர்களிடம் போய்க் கேட்கவும் கூடாது. பிரச்னையை எதிர்கொள்ள முடியாமல் தட்டிக் கழிக்கவும் கூடாது. பொறுமையாக எல்லாக் கோணங்களிலும் அலசிப் பார்த்துச் சரியான தீர்வுகளைக் கச்சிதமாக எடுக்கும் திறனும் வேலைக்கு வேண்டும். ●


**வெண்மை சந்தா...**

# மகளிர் தின சிறப்புச் சலுகை!



மார்ச் 8-ம் தேதி கொண்டாடப்படும் சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு வெண்மை மாத இதழுக்கான சந்தா தொகையில் இந்த ஆண்டு முழுக்க சந்தா செலுத்தும் பெண்களுக்குச் சிறப்புச் சலுகை வழங்கப்படுகிறது.

**ஓர் ஆண்டு சந்தா: ரூ. ~~200~~/–**
**மகளிர் சலுகை சந்தா: ரூ. 150/–**

**இரண்டு ஆண்டுகள் சந்தா: ரூ. ~~380~~/–**
**மகளிர் சலுகை சந்தா: ரூ. 300/–**

இச்சலுகையை முழுமையாகப் பயன்படுத்தி மகளிர் தங்களையும் தங்கள் இல்லத்தையும் சுற்றத்தையும் இன்னும் சிறப்பாகப் பேணி நலம் பெற வேண்டுகிறோம். (சந்தா செலுத்தும் வழிமுறைகளுக்கு 23-ம் பக்கத்தைப் பார்க்கவும்.)

ஒரு மாணவன் எப்போதும் கல்லூரிக்குத் தாமதமாக வருவான். ஒழுங்கான ஆடைகள் அணிவதில்லை. காலை உணவைக்கூடச் சாப்பிட நேரமில்லாமல் பரபரப்பாக வியர்த்து ஒழுக வருவான். கல்லூரியில் தரும் புராஜெக்ட்களை ஒழுங்காக முடிக்க மாட்டான். எப்போதும் பேராசிரியர்களிடம் “சாரி” கேட்பான்.

ஆனால், அவன் நன்கு படிக்கும் மாணவன். எல்லோரிடமும் பணிவாக இருப்பவன். அவனது இயல்பான குணங்களின்மீது வகுப்பு ஆசிரியருக்கு மரியாதை இருந்தது. அவர் அவனைத் தனியாக அழைத்து விசாரித்தார். அவன், ‘‘எனக்கு எதையும் சரியாகச் செய்ய நேரம் இல்லை” என்று பதில் சொன்னான். ‘‘நீ உனக்கு இருக்கும் நேரத்தையெல்லாம் என்ன செய்கிறாய்?” என ஆசிரியர் கேட்டார். அவனால் பதில் சொல்ல முடியவில்லை. அவனால் சரியாகத் திட்டமிட்டு எதையும் செய்ய முடியவில்லை என்பதை ஆசிரியர் புரிந்துகொண்டார்.

எனவே அவனுக்கு அறிவுரை சொன்னார். ‘‘உன்னுடைய ஒருநாள் என்பதை ஒரு காய்கறிக் கூடையாகக் கற்பனை செய்துகொள். அதில் எல்லாவற்றுக்கும் இடம் தருவது சரிதான். ஆனால் எதை முதலில் வைப்பது, எதைக் கடைசியாக வைப்பது என முறை இருக்கிறது. முட்டையை முதலில் வைத்துவிட்டுப் பிற பொருட்களை அதன் மேல் வைத்தால் நமக்குத்தான் நஷ்டம். முட்டைகளை மேலே வைத்தால்தான் உடையாமல் இருக்கும். அதுபோல முக்கியமான விஷயங்களுக்கு முதலில் இடம் கொடு. முதலில் அவற்றை செய்து முடி! அவற்றைத் தள்ளிப் போட்டால் வாழ்வில் உனக்குப் பெரிய நஷ்டம் ஏற்படும்” என்றார்.

‘முட்டைகளை முதலில் வைக்காதே’ என்ற இந்த அறிவுரை மிக முக்கியமானது. நேர நிர்வாகத் திறனைக் கற்றுக் கொடுப்பது. நேரத்தை நிர்வாகம் செய்வது மிகவும் சிக்கலான விஷயம். பணம் நாம் சும்மா இருக்கும்போது பத்திரமாக நம் கையில் இருக்கும். ஆனால், நாம் சும்மா இருந்தாலும் நேரம் செலவாகிக்கொண்டே இருக்கும். அதைச் சும்மா செலவாக விடாமல் நாம் பயனுள்ள வகையில் செலவழிப்பதுதான் நேர நிர்வாகம். அதற்கு என்ன செய்ய வேண்டும்?

- உங்களுக்கு நிறைய ஐடியாக்கள் மனதில் தோன்றலாம். எல்லாவற்றையும் மிகச் சிறப்பானதாகக்

# நேரத்தைக் கையாளும் திறன் பெறுங்கள்!






கருதி செயல்படுத்த நினைக்காதீர்கள். எல்லாப் பாதைகளிலும் ஒரே நேரத்தில் போக ஆசைப்படும் ஒருவர், கடைசியில் எந்த ஊருக்கும் போக மாட்டார். உங்களுக்கு வாழ்வில் எது முக்கியம் என்று தோன்றுகிறதோ, அதை அடைவதற்கான ஐடியாக்களை மட்டுமே செயல்படுத்துங்கள்.

• 'நேரம் இல்லை' என்று ஒருபோதும் காரணம் சொல்லாதீர்கள். யாருக்கும் நேரம் தீர்ந்து போவதில்லை. 'செய்வதற்குச் சுலபமாக இருக்கிறது', 'இதைச் செய்யப் பிடித்திருக்கிறது' என்பது போன்ற காரணங்களுக்காகச் சிலர் சில வேலைகளை உடனே செய்வார்கள். முக்கியமான வேலைகளைத் தள்ளிப் போடுவார்கள். அப்படி இல்லாமல், அவசியமான விஷயங்களுக்கு முன்னுரிமை கொடுங்கள்.

• 'இதை நேரம் கிடைக்கும்போது பார்க்கலாம்' என்று எந்த அவசியமான விஷயத்தையும் ஒரு நாளில் தள்ளிப் போடாதீர்கள். நம் நேரம் நாமே நினைத்துப் பார்க்க முடியாதபடி செலவாகிவிடும். 'இன்றைய நாளில் நாம் முடிக்க வேண்டிய முக்கியமான வேலைகள் என்னென்ன' என்று தினமும் பட்டியல் போட்டு வேலைகளை முடியுங்கள்.

• சில நாட்களில் உங்களால் உற்சாகமாகப் பல மணி நேரம் வேலை பார்க்க முடியும். மனம் அப்படி ஈடுபாட்டுடன் இருக்கும்போது, திட்டமிட்டதைவிட அதிக வேலைகளை முடித்துவிடுங்கள். சில நாட்களில் மனம் சோர்வாக இருக்கும். அப்போது வேலைகள் மெதுவாகத்தான் நகரும். அதற்காகக் கவலைப்படாதீர்கள்.

• ஒரே நேரத்தில் பல வேலைகளை இழுத்துப் போட்டுக்கொண்டு செய்யாதீர்கள். நம் மனம் ஒரு நேரத்தில் ஒற்றை விஷயத்தில் மட்டுமே கவனம் செலுத்தும் வல்லமை பெற்றது. ஒன்றிலிருந்து இன்னொன்றுக்கு நம் மூளையின் கவனம் மாறுவதற்கும் கொஞ்ச நேரம் தேவை. ஒரே நேரத்தில் இரண்டு, மூன்று விஷயங்களைச் செய்யும்போது எதையும் முழுமையாகச் செய்ய முடியாது. மூளையும் களைப்படையும்.

• இன்றைய நாளில் எதெல்லாம் முக்கியம், எதெல்லாம் அவசியம், கூடுதல் நேரம் இருந்தால் என்ன செய்ய வேண்டும் என எல்லாவற்றையும் திட்டமிடுங்கள். எதையும் மறந்துவிடாமல் செய்வதற்கு இந்தப் பட்டியல் உதவும்.

• முக்கியமான விஷயங்களைக் குறித்து வைத்துக்கொள்ளுங்கள். ஒரு வேலையைச் செய்யும்போது, இன்னொரு வேலை குறித்த ஐடியா மனதில் தோன்றலாம். உடனடியாக இதிலிருந்து அதற்கு மாறினால், இரண்டையுமே முடிக்க முடியாமல் போகலாம். மறந்து போகாமல் இருக்க, அதைக் குறித்து வையுங்கள். நேரம் கிடைக்கும்போது அதை எடுத்துப் பாருங்கள்.

• ஒரு நாளில் எட்டு அல்லது பத்து மணி நேரம் ஒருவர் வேலை பார்க்கலாம். ஆனால், முழுமையாகக் கவனத்தைக் குவித்து வேகமாக வேலை பார்க்கும் நேரம் என்பது, அதில் பாதிக்கும் குறைவாகவே இருக்கும். அந்த நேரத்தில் மிகவும் முக்கியமான வேலைகளை முடித்துவிடுங்கள்.

• எல்லா வேலைகளையும் மிகச் சிறப்பாகச் செய்வதுதான் நம் பணி என்று நினைக்காதீர்கள். அவசரமாக இன்றே முடிக்க வேண்டிய வேலை ஒன்றை ஓரளவு நேர்த்தியாக இன்றைக்கே செய்துவிடுவதுதான் நல்லது. அதை மிகச் சிறப்பாக நாளை செய்து முடிக்கலாம். ஆனால், அந்த வேலையால் ஒரு பயனும் இருக்காது! வேலையில் நேர்த்தியைவிடப் பயனை முக்கியமான விளைவாகப் பாருங்கள்.

• நிறைய நேரம் வேலை பார்ப்பவர்தான் சிறப்பான உழைப்பாளி என நினைக்காதீர்கள். நான்கு மணி நேரத்தில் மிகச்சிறப்பாகத் தன் வேலையை முடிப்பவரும் உண்டு. அதே வேலையைப் பத்து மணி நேரம் உழைத்தாலும் செய்து முடிக்க முடியாமல் திணறுபவரும் உண்டு. உங்களின் இயல்புக்கு ஏற்றபடி வேலை செய்யுங்கள்.

• முழுக் கவனத்தையும் செலுத்தி செய்ய வேண்டிய வேலைகள், சாதாரணமாகச் செய்ய வேண்டிய வேலைகள் ஆகிய இரண்டையும் பிரித்துக்கொள்ளுங்கள். முதல் வகை வேலைகளை ஒரு நாளின் ஆரம்பத்தில் செய்து முடியுங்கள். மதியத்துக்கு மேல் களைப்பாக இருக்கும்போது சாதாரண வேலைகளைச் செய்யுங்கள்.

• எந்த இரண்டு வேலைகளும் ஒரே அளவுக்கு முக்கியமானவையாக இருக்காது. எந்த நேரத்தில் எந்த வேலை முக்கியம் என்பதை உணர்ந்து செய்யுங்கள்.

• எப்போது வேண்டுமானாலும் செய்துகொள்ளலாம் என்று எந்த வேலையையும் தள்ளிப் போடாதீர்கள். எந்த வேலையாக இருந்தாலும், அதற்கு ஒரு காலக்கெடுவை நிர்ணயம் செய்து, அதற்குள் அந்த வேலையை முடித்துவிடுங்கள். ●

# திறன்களைத் தேடும் வழிகள்!



- வெற்றிகரமான மனிதர் ஆக வேண்டும் என்று நினைக்காதீர்கள். மதிப்பிற்குரிய மனிதராகச் சரியான பாதையில் செல்லுங்கள். வெற்றி உங்களைத் தேடி வரும்.
- பணம் வந்து கொட்டுவது வெற்றியின் அளவீடு அல்ல! நீங்கள் வெற்றி பெற்றால் பணம் தானாக வரும். அதேபோல மகிழ்ச்சி என்பது வெற்றியைத் தொடர்ந்து வருவதில்லை. நீங்கள் மகிழ்ச்சியாக இருந்தால், வெற்றி தானாக வரும்.
- தங்கள் இலக்கில் கவனம் வைத்து, தெளிவாகவும் ஒழுக்கமாகவும் அதை நோக்கிப் பயணம் செய்யும் ஒருவரிடம், வெற்றி நிரந்தரமாகத் தங்கியிருக்கும்.
- ஒருவர் மிகச் சிறந்த வெற்றியாளராகத் திகழ வேண்டுமானால், அவர் வாழ்க்கை முழுக்கக் கற்றுக்கொண்டே இருக்க வேண்டும். இந்தச் சுயகல்வி என்பது பள்ளி, கல்லூரியில் பெறும் கல்வியைத் தாண்டிய உன்னதமான விஷயம்.
- உங்களை வெற்றியாளராக மாற்றுவதில் உங்கள் மனமும் உடலும் முக்கியப் பங்கு வகிக்கின்றன. இரண்டையும் ஆரோக்கியமாகப் பராமரியுங்கள். மனதுக்கும் உடலுக்கும் போதுமான ஊட்டம் கொடுங்கள்.
- நீங்கள் பின்பற்றும் பழக்கங்களே வெற்றியின் ரகசியம். கெட்ட பழக்கங்களை மாற்றிக்கொள்வதே, வெற்றிக்கதவைத் திறப்பதற்கான சாவி. நல்ல பழக்கங்களே மதிப்பான வெற்றியைக் கொடுக்கும்.
- வெற்றியாளர்கள் பலரும் தாங்கள் சரியான பாதையில்தான் போகிறோமா என்பதைக் கவனித்துக்கொண்டே இருப்பார்கள். தங்களை முழுமையாகப் புரிந்துகொண்டு வேலை செய்வார்கள். தாங்கள் எதற்காக ஒன்றைச் செய்கிறோம் என்ற தெளிவு அவர்களுக்கு இருக்கும்.
- உங்களின் வாழ்க்கை சிறப்பாக அமைய வேண்டும் என்பதில் அதிக அக்கறை உங்களுக்கே இருக்க வேண்டும். உங்களைத் தவிர வேறு யாரும், நீங்கள் செய்யும் செயல்களின் விளைவுகளுக்குப் பொறுப்பாக முடியாது.
- மற்ற எல்லோரையும்விட உங்களுக்கே அதிக முக்கியத்துவம் கொடுங்கள். மற்ற எல்லோரையும்விட உங்களை அதிகம் நேசியுங்கள். இது சுயநலம் கிடையாது. தன்னை மதிக்கும் ஒருவரால்தான் அடுத்தவர்களையும் மதிக்க முடியும்.
- ‘இது உங்களால் முடியாது’ என்று மற்ற எவர் சொல்வதையும் நம்பி சோர்ந்து போகாதீர்கள். உங்களின் பலம் என்ன, உங்களால் செய்ய முடிந்தது என்ன என்பது உங்களுக்குத் தெரியும். எனவே, உங்கள் ஆழ்மனம் சொல்வதைக் கேளுங்கள்.
- மற்ற எல்லோரும் செய்வதையே அதேபோலச் செய்பவர்கள், மற்றவர்களைத் தாண்டிய சிறந்த வெற்றியை அடைய முடியாது. எல்லோரும் சக்கரத்தை உருவாக்குகிறார்கள் என்றால், நீங்கள் கார்களை உருவாக்குங்கள். மற்றவர்கள் செய்யாத, அதைவிட மேம்பட்ட ஒன்றைச் செய்வதுதான் சிறந்த வெற்றியை அடையும் திறன்மிக்க வழி.
- தொழில்நுட்பங்களை உங்கள் பணிக்கும் கற்றலுக்கும் பயன்படுத்துங்கள். பொழுதுபோக்குகளுக்குப் பயன்படுத்துவதைக் குறைத்துக் கொள்ளுங்கள். வாரத்தில் நான்கு மணி நேரமாவது போன், டி.வி என எதுவும் இல்லாமல் தனியாக அமர்ந்து படிப்பதற்கும் சிந்திப்பதற்கும் செலவிடுங்கள்.
- நிறைய செலவிடுங்கள். உங்கள் நேரத்தையும் பணத்தையும் பயனுள்ள விஷயங்களுக்குச் செலவிடுங்கள். நிறைய செலவிடும்போது உங்களுக்கு நிறைய திரும்பக் கிடைக்கும். ●







# சர்வதேச யோகா தின விழாவில் ராம்ராஜ்!

உலக சமுதாய சேவா சங்கத்தின் திருப்பூர் மண்டலம் சார்பாக சர்வதேச யோகா தின விழா, 21.06.2026 ஞாயிறு அன்று காலை 6 மணிக்குத் திருப்பூர் குமரன் மகளிர் கல்லூரியில் நடைபெற்றது. ராம்ராஜ் காட்டன் நிறுவனத்தின் தலைவரும், உலக சமுதாய சேவா சங்கத்தின் துணைத்தலைவருமான திரு.K.R.நாகராஜன் அவர்கள் விழாவில் கலந்துகொண்டு வாழ்த்துரை வழங்கினார். தனது வாழ்த்துரையின்போது ‘‘குமரன் கல்லூரி வளாகத்தில் தினசரி யோகப் பயிற்சிகள் நடத்தி, மக்களின் நலனை மேம்படுத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்” என்று கேட்டுக்கொண்டார்.


திருப்பூர் தெற்குத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு.S.பாலமுருகன் அவர்கள் விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு சிறப்புரை ஆற்றினார். தனது உரையின்போது அவர், “தமிழக சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் மனவளக்கலை பயிற்சிகள் வழங்குவதற்குரிய ஏற்பாடுகள், மாண்புமிகு தமிழக முதல்வர் மூலம் செய்யப்படும்’’ என்று தெரிவித்தார். அவருக்கு திரு.K.R.நாகராஜன் அவர்கள் நினைவுப்பரிசு வழங்கிச் சிறப்பித்தார்.

இவ்விழாவில் உலக சமுதாய சேவா சங்கத்தின் துணைத் தலைவர்களான ஸ்கை திரு.V.சுந்தர்ராஜ் மற்றும் தி சென்னை சில்க்ஸ் நிர்வாக இயக்குநர் திரு.P.K.ஆறுமுகம் ஆகியோரும் மற்றும் மண்டல நிர்வாகிகளும் கலந்துகொண்டு சிறப்பித்தனர். இவ்விழாவில் சுமார் ஆயிரம் மனவளக்கலை பயிற்சியாளர்கள் கலந்துகொண்டு யோகப் பயிற்சிகள் செய்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## கவனித்துக் கால்களை வை!



ஒரு துறவியின் மூத்த சீடர்கள் இருவர் ஏரிக்குள் மீன் பிடிக்கப் படகில் போனார்கள். ஆசிரமத்தில் புதிதாகச் சேர்ந்திருந்த ஒரு சீடனும் கூடவே போனான். நிறைய மீன்களைப் பிடித்துப் படகில் சேகரித்தார்கள். ஒரு கட்டத்தில் தூண்டிலில் போடுவதற்கான இரை தீர்ந்துவிட்டது. மூத்த சீடர்களில் ஒருவன், “நான் போய் எடுத்து வருகிறேன்” என்று படகிலிருந்து தாவி ஏரியில் கால் வைத்தான். என்ன ஆச்சர்யம்... அவன் ஏரி நீரில் மூழ்கவும் இல்லை, நீச்சல் அடிக்கவும் இல்லை. தண்ணீரின் மேல் நடந்து கரைக்குப் போய் இரை எடுத்து வந்தான். புதிய சீடன் ஆச்சர்யத்தில் உறைந்து போய் இதைப் பார்த்தான்.



## பீனிக்ஸ் போல உயிர்த்தெழுங்கள்!

விழுவது தவறு இல்லை. பந்து போல உடனே மீண்டு மேலே வராமல், விழுந்த இடத்திலேயே கிடப்பதுதான் தவறு! இன்று உலகின் நம்பர் 1 பணக்காரர் என்ற பெருமைக்குரிய இடத்தை அடைந்திருக்கும் எலான் மஸ்க், இப்படி எத்தனையோ முறை விழுந்து மீண்டவர்தான்! PayPal என்ற நிறுவனத்தில் ஒரு பணியாளராகத் தன் வாழ்வைத் தொடங்கியவர் எலான் மஸ்க். தன் வேலையை நேர்த்தியாகச் செய்வது தொடர்பாக மேலதிகாரியுடன் சண்டை போட்டதால் அவர் பணிநீக்கம் செய்யப்பட்டார். அதன்பின் அவருக்கு மலேரியா தொற்று ஏற்பட்டு மூளை வரை பாதிப்புப் பரவியது. ஆறு மாதச் சிகிச்சைக்குப் பிறகு எப்படியோ அவர் பிழைத்தார்.

அதன்பின் தன் தொழில்நுட்ப அறிவால் சம்பாதித்த அத்தனை பணத்தையும் போட்டு ‘ஸ்பேஸ் எக்ஸ்’ என்ற தனியார் விண்வெளி நிறுவனத்தைத் தொடங்கினார். அவர் ஏவிய முதல் மூன்று ராக்கெட்களும் பழுதாகி வெடித்துச் சிதறின. நிறுவனத்தில் முதலீடு செய்த அத்தனை பேரும் பின்வாங்கினார்கள். அடுத்து ஒரே ஒரு ராக்கெட் ஏவுவதற்கு மட்டுமே பணம் இருந்தது. அதுவும் தோற்றால் தெருவுக்கு வர வேண்டிய நிலை. ரிஸ்க் எடுத்து அதில் ஜெயித்தார்.

அதன்பின் அவர் டெஸ்லா கார் நிறுவனத்தைத் தொடங்கினார். அவர் நிறுவனம் உருவாக்கிய எலெக்ட்ரிக் கார்கள் அனைத்தும் விலை அதிகம் என்பதால் மக்கள் விரும்பவில்லை. பெரும் நஷ்டத்தைச் சமாளிக்க அவர் தனது வாழ்நாள் சம்பாத்தியம் முழுவதையும் அந்த நிறுவனத்தில் முதலீடு செய்ய வேண்டிய சூழல். அதுவும் போதாமல் நண்பர்களிடம் நிறைய கடன் வாங்கினார். ஒருவழியாக அந்த காரை அமெரிக்க மக்கள் விரும்பத் தொடங்க, எலான் மஸ்க் மீண்டு வந்தார். இப்படி ரிஸ்க் எடுத்து நஷ்டப்பட்டாலும், பீனிக்ஸ் பறவை போல உயிர்த்தெழும் திறமை இருந்ததால்தான் அவர் உலகின் பெரும் பணக்காரராக இருக்கிறார்.

அதன்பின் ஒரு மணி நேரத்தில் அந்த இரையும் தீர்ந்துபோகும் அளவுக்கு ஏராளமான மீன்களைப் பிடித்தார்கள். இம்முறை இன்னொரு மூத்த சீடன், கரைக்கு அதேபோலவே தண்ணீரில் நடந்து போய் இரையை எடுத்து வந்தான். இம்முறையும் புதிய சீடனுக்கு ஆச்சர்யம் தாங்க முடியவில்லை. மூத்த சீடர்களிடம் விளக்கம் கேட்க நினைத்தாலும், அவன் கேட்கவில்லை. இந்தத் துறவியிடம் சேரும் எல்லோருக்குமே பக்தியுடன் அவரை வணங்கினால் இந்தச் சக்தி கிடைத்துவிடும் என்று நம்பினான்.

அடுத்த முறை இரை தீர்ந்தபோது, “நான் கரைக்குப் போய் எடுத்து வருகிறேன்” என்று எழுந்தான் புதிய சீடன். தங்கள் குருவான துறவியை மனதில் நினைத்து, கரங்களைக் குவித்து கண்களை மூடி வணங்கினான். தன் மூத்தோர்களைப் போலவே படகிலிருந்து தாவி ஏரித் தண்ணீரில் கால் வைத்தான். அடுத்த நொடி ஏரிக்குள் மூழ்கிவிட்டான். தட்டுத் தடுமாறித் தண்ணீருக்கு மேலே அவன் வந்ததும், மூத்த சீடர்கள் கத்தினார்கள். “உனக்குப் பக்தி இருந்தால் இருந்துவிட்டுப் போகட்டும்! ஆனால், தண்ணீருக்குள் நட்டு வைத்திருக்கும் பாறைகளைப் பார்த்து, அவற்றில் கால் வைத்து நடந்து போ! இது பல நாட்களாகக் கிராம மக்கள் பயன்படுத்தும் பாதை” என்றார்கள். அப்போதுதான் அவர்கள் ‘தண்ணீரில் நடந்த ரகசியம்’ அவனுக்குப் புரிந்தது.

அடுத்தவர்களின் வெற்றிகளைப் பிரமிப்புடன் பார்க்காமல், அவர்கள் எப்படி அதை அடைந்தார்கள் என்ற வழியைக் கவனியுங்கள். நீங்களும் அந்தத் திறனை அடையலாம்!

## கனவும் ஆர்வமும்!

ராஜேஷுக்கு ஐ.ஐ.டி–யில் சேர்ந்து படிக்க வேண்டும் என்று லட்சியம். அதற்காகப் புகழ்பெற்ற கோச்சிங் சென்டர் ஒன்றில் சேர்ந்து நுழைவுத் தேர்வுக்குப் படித்தான். அவன் வகுப்பில் முதல் மதிப்பெண் எடுக்கும் திறமையான மாணவன்தான். என்றாலும், லட்சக்கணக்கில் செலவழித்துப் படித்தும் அவனால் ஐ.ஐ.டி–யில் சேரும் அளவுக்கு மதிப்பெண்களை எடுக்க முடியவில்லை. வேறு வழியின்றி உள்ளூர்க் கல்லூரி ஒன்றில் எஞ்சினியரிங் சேர்ந்தான்.



சில நாட்கள் கழித்து அவனைத் தேடிவந்தான் ஒரு பையன். “அண்ணா, நான் ஐ.ஐ.டி–யில் சேர ஆசைப்படறேன். என்கிட்ட கோச்சிங் போற அளவுக்கு வசதியில்லை. நீங்க கோச்சிங் போனப்ப படிச்ச புத்தகங்களை எனக்குத் தர்றீங்களா? நான் அதைப் படிச்சு என்ட்ரன்ஸ் எக்ஸாம் எழுதிப் பார்க்கிறேன்” என்றான்.

அந்தப் பையனை ராஜேஷுக்குத் தெரியும். பக்கத்து ஏரியாவில் இருக்கும் ஏழ்மையான குடும்பத்துப் பையன். சாதாரணப் பள்ளியில் படிக்கிறான். ‘நாம் கோச்சிங் போய்க்கூட பாஸ் பண்ணவில்லை. இவன் என்ன செய்யப் போகிறான்’ என்று மனதுக்குள் நினைத்தாலும், எல்லாப் புத்தகங்களையும் கொண்டுவந்து கொடுத்து வாழ்த்துச் சொன்னான். எப்படித் தேர்வு எழுத வேண்டும் என்றும் வழிகாட்டினான்.

அடுத்த ஆண்டு அந்தப் பையன் ஆனந்தக் கண்ணீருடன் வந்து ராஜேஷ் வீட்டுக் கதவைத் தட்டினான். அவன் கையில் இனிப்பு பாக்ஸ் ஒன்று இருந்தது. “நான் பாஸ் பண்ணிட்டேன்னா! எனக்குச் சென்னை ஐ.ஐ.டி–யிலயே இடம் கிடைச்சிருக்கு” என்றான். ராஜேஷுக்கு இன்ப அதிர்ச்சி. அந்தப் பையனிடம் பேசியபோது, அவனுக்குள் இருந்த பெரும் கனவும் ஆர்வமும்தான் அவனை ஐ.ஐ.டி தேர்வில் வெல்லும் திறமைசாலியாக மாற்றியது என்பது தெரிந்தது.

# நிராகரிப்பிலிருந்து மீண்டு வென்றவர்!



சிறுநகரம் ஒன்றில் நகைக்கடை நடத்திய நடுத்தரக் குடும்பத்தில் பிறந்தார் ஷாகிரா. ஒரு கட்டத்தில் பிசினஸில் நஷ்டமாகி கார், வீடு என எல்லாவற்றையும் விற்க வேண்டிய நிலைக்கு ஆளானது குடும்பம். அப்பாவும் அம்மாவும் வறுமையில் தவிக்க, தன் மாமா வீட்டில் சில ஆண்டுகள் வளர்ந்தார் ஷாகிரா. பிறகு திரும்பவும் வந்தவர், "நாம் ஏன் இவ்வளவு ஏழைகளாக இருக்கிறோம்?" என அப்பாவிடம் கேட்டார். சொந்த வீடில்லாமல் வீதியோரம் வசிக்கும் ஏழைகளைக் காட்டிய அப்பா, ''இவர்களைவிட நம் நிலை பரவாயில்லை" என்றார். வறுமையிலிருந்து மீள உறுதி எடுத்தார் ஷாகிரா.

எட்டு வயதில் பள்ளி இசைக்குழுவில் சேர்ந்தார் ஷாகிரா. ''ஆனால், உன் குரல் பாடுவதற்குத் தகுதியில்லாதது'' எனப் பள்ளி ஆசிரியர்கள் நிராகரித்தார்கள். ஏமாற்றத்துடன் வீட்டுக்கு வந்த ஷாகிராவை அப்பா உற்சாகப்படுத்தி, "நீ விரும்புவதைச் செய்" எனப் பாடவும் ஆடவும் பயிற்சி எடுக்க வைத்தார். தனக்குள் இயல்பாகவே இந்தத் திறமை இருப்பதை அப்போதுதான் உணர்ந்தார் ஷாகிரா.

ஷாகிரா ஆரம்பத்தில் வெளியிட்ட இரண்டு இசை ஆல்பங்களுக்குப் பெரிதாக வரவேற்பு இல்லை. ஆனால், அவர் நம்பிக்கை இழக்கவில்லை. மூன்றாவது ஆல்பத்தை தான் விரும்பியபடி உருவாக்கினார். அது குறுகிய காலத்தில் 30 லட்சம் பிரதிகள் விற்று அவருக்குப் பெரும் புகழைத் தேடித் தந்தது. அதன்பின் அவர் உயரே உயரே போய்க்கொண்டே இருக்கிறார். கொலம்பியா என்ற நாட்டுக்கு இன்று அவர் அடையாளம். 'லத்தீன் அமெரிக்க இசையின் மகாராணி' என்கிறார்கள் அவரை! அவரது பாடல்களை ரசிப்பதற்காகவே பலர் ஸ்பானிஷ் மொழி கற்கிறார்கள். 36 ஆண்டுகளாக இசையின் மூலம் அதிகம் சம்பாதித்துவரும் பெண்களில் ஒருவராக இருக்கிறார்.

தன் திறமையை நம்பும் ஒருவர், அதன் மூலம் தன் கனவுகளை அடைய முடியும் என்பதற்கு ஷாகிரா வாழும் உதாரணம். உங்கள் திறமைகளை மெருகேற்றிக்கொள்ள, கீழ்க்காணும் குணங்களைப் பெறுங்கள்:

- நீங்கள் எந்தத் துறையில் இருந்தாலும், சரியான முடிவுகளை எடுப்பதற்குத் தேவையான அளவு அதில் அறிவை வளர்த்துக்கொள்ளுங்கள்.
- எப்போதும் உணர்வுகளைக் கட்டுக்குள் வைத்திருங்கள். உணர்ச்சி வேகத்தில் நிதானம் இழந்து எதிர்மறையாக நடந்துகொள்ளாதீர்கள்.
- நீங்கள் இதுவரை பெற்ற அனுபவங்களின் அடிப்படையில் ஆழ்மனம் உங்களைச் சரியாக வழிநடத்தும். எனவே, முக்கியமான தருணங்களில் உங்கள் உள்ளுணர்வு சொல்வதைக் கேளுங்கள்.
- உங்களுக்குள் தனலாகக் கனன்றுகொண்டிருக்கும் ஊக்கத்தைக் கைவிடாதீர்கள். சிறுதுளி நெருப்பு கூட, ஒரு ஊரின் பசியையே தீர்க்கும் அணையா அடுப்பாகும் வல்லமை படைத்தது.
- எவ்வளவு கடினமான சூழலிலும், நெருக்கடியான தருணத்திலும், மோசமான தோல்வியிலும், நம்பிக்கை இழக்காதீர்கள். எல்லா இரவுகளுக்குப் பிறகும் ஒரு விடியல் பிறக்கிறது.
- எது சரி, எது தவறு என்று அறிந்து சரியான பாதையில் மட்டுமே செல்லுங்கள். அறத்தின் பக்கம் நின்று, நெறிப்படி எதையும் செய்து வெற்றியைப் பெறுவது பெருமைக்குரியது.
- புதுமைகளைக் கற்பனை செய்யுங்கள், செயல்படுத்துங்கள். புதிய வழிகளைக் கண்டறியும் திறமை படைத்தவர்களை, வெற்றி தேடிவந்து அரவணைக்கிறது.



Owned, Published by K.R. NAGARAJAN, Published from 10, Sengunthapuram Mangalam Road, TIRUPUR - 641 604 & Printed by B. ASHOK KUMAR at RATHNA OFFSET PRINTERS, 40, Peters Road, Royapettah, Chennai - 600 014. Editor : T.J. GNANAVEL


ACTIVE FIT
VEST
RAMRAJ
VESTS
BRIEFS • TRUNKS
Inners for Winners!

Venmai Monthly - Postal Registration No.TN/TRU/28/2025-27. Registered with the Registrar of Newspapers for India under No.TNTAM/2016/68519. Day of Publishing 01-07-2026. Posted at Tirupur BPC on 5th of every month.

